# வலிமார்களின் அற்புதங்களில் வஹ்ஹாபிகளுக்கு மறுப்புரை

## பெயர் மாற்றமும், நன்றி நவிலலும்

தமிழகத்தில் 1956 வாக்கில் வஹ்ஹாபிய சித்தாந்தம் ஊடுருவியபோது நம் தமிழகவாழ் பெரியோர்கள் குறிப்பாக கண்ணியமிகு நாகூர் ஷரீப் மௌலானா மௌலவி அஷ்ஷெய்கு பெ.த.மு.முஹம்மத் பாக்கர் சாஹிப் காதிரி, மேன்மைக்குரிய மு.அ. அப்துற்றஹ்மான் மரைக்காயர் சித்தீகி காதிரி போன்றோர் வஹ்ஹாபியத்தை விளக்கி பல்வேறு நூல்களைத் தொகுத்து தமிழக மக்களை எச்சரித்து வஹ்ஹாபியப் பொய் பிரச்சாரத்திற்கு இஸ்லாமிய மக்கள் பலியாகி விடாது பாதுகாத்தனர். இதன் காரணமாக வஹ்ஹாபிகள் தமது கோட்பாடுகளை கொள்கைகளை நேடியாக மக்களிடம் எடுத்துச் சொல்லப் பயந்து தயங்கிப் பின் வாங்கினர்.

நாம் வஹ்ஹாபியக் கருத்துக்களை நேரடியாகக் கூறினால் சரக்கு விலை போகாதெனக் கருதியவர்கள் தப்லீக் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி, தேவ்பந்தி, அஹ்லெ ஹதீது, எஸ்.ஐ.எம்., ஜாக் எனப் பல வண்ணங்களாகப் பிரிந்து தமிழகத்திற்குள் அடியெடுத்து வைத்தனர். தௌஹீத், கலிமா, தொழுகை என்னும் போலி போர்வையை போர்த்திக் கொண்டு ஜமாஅத் என்னும் பெயரில் படையெடுக்கத் துவங்கிய போது,

வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக் கல்லூரியின் முதல்வர் **மௌலானா மௌலவி அல்லாமா பி.ஏ. அபுபக்கர் ஹஜ்ரத் கிப்லா அவர்களும், காயல் நகர மாமேதை மௌலானா மௌலவி அஷ்ஷெய்கு அல்லாமா அஷ்ஷெய்கு சூபி ஹழ்ரத் அவர்களும், கொடிக்கால்பாளையம் அ.த. அப்துல் மஜீத் சூபி ஹழ்ரத் அவர்களும், தஞ்சை சாஹெப் வலியுல்லாஹ் அவர்களும், மறைந்த முன்னாள் முஸ்லிம் லீக் தலைவர் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களும், தமிழக முன்னாள் அரசு தலைமை காஜி அல்லாமா ஹபீபுல்லாஹ் ஹழ்ரத் ரஹிமஹுமுல்லாஹ்** அவர்களும் பகிரங்கமாக தப்லீக் ஜமாஅத்தை கண்டனம் செய்து மார்க்க பத்வாக்கள் (தீர்ப்புக்கள்) வெளியிட்டும், நூல்கள் எழுதியும் இஸ்லாமிய மக்களை எச்சரித்தனர்.

இவ்வரிசையில் மர்ஹூம் ஜனாப். மு.ஹ. அப்துர்ரஹ்மான் மரைக்காயர், 14, ஆலியா மரைக்கார் தெரு, நாகப்பட்டினம் அவர்களால் ஹிஜ்ரி 12-3-1376, கி.பி. 17-10-1956ல் ஔலியாக்களின் அகமியம் என வெளியிடப்பட்ட பழம்பெரும் மறுப்பு நூலை வலிமார்களின் அற்புதங்களில் வஹாபிகளுக்கு மறுப்புரை (கராமத்தில் அவ்லியாயி ஃபீ ரத்தில் வஹ்ஹாபிய்யா) எனப் பெயர் மாற்றம் செய்து வெளியிடுவதில் சாஹெப் வெளியீட்டகம் பெருமகிழ்ச்சி அடைகிறது.

மேற்கண்ட நூலை வெளியிட அனுமதி வழங்கிய ஹழ்ரத் அவர்களின் இல்லத்தினரை பாராட்டுவதுடன், மனம் நிறைந்த நன்றியையும் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

பல்வேறு ஆதாரங்களைத் தாங்கி ஹக்கான விசயங்களை பகிரங்கமாக வெளிப்படுத்தி இப்பழமையான நூலை படித்து உண்மையை உணர்ந்து நாளை மஹ்ஷர் வெளியில் இறைவனின் திருமுன் நிற்கும்போது அண்ணல் நபிகளாரின் ஷபாஅத்தை பெற்றிடும் நல்லடியார்கள் கூட்டத்தில் இணையும் பேறு கிடைத்திட இருகரம் ஏந்தி இறைஞ்சுகிறோம்.

இந்த வஹ்ஹாபிய கொள்கைகயைத்தான் இன்றைய இல்யாஸி டில்லி தப்லீக்வாதிகள், தவ்ஹீத், கலிமா, தொழுகை, கஷ்த், சில்லா, ஷப்குஜாரி, அமீர் கார்க்கூன், இஜ்திமா எனும் போலி லேபிள்களை ஒட்டி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனராதலால் பொதுமக்கள் எச்சரிக்கையோடு இருந்து தங்களின் ஈமானை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறோம். நூல் வெளியீட்டிற்கு உதவி புரிந்த அனைவருக்கும் நமது நன்றியை காணிக்கையாக்குகிறோம்.

*என்றும் பணிவுடன்,*

**சாஹெப் வெளியீட்டகம்,**

**மௌலவி சையத் வஜீஹுன் நகீ சக்காப்,**

13 தாமரைத் தெரு, தங்கம் நகர்,

தஞ்சாவூர் -613 007.

**வலிமார்களின் அற்புதங்களில் வஹ்ஹாபிகளுக்கு மறுப்புரை**

இக்காலத்தில் அறிந்தோ, அறியாமலோ 'வஹ்ஹாபியக்' கொள்கையுடையோர் சிலர் அவ்லியாக்களை நிந்தித்து பத்திரிக்கைகள் மற்றும் நூல்கள் வாயிலாக பிரச்சாரம் செய்ய முற்பட்டுள்ளனர். 'சுன்னத் வல் ஜமாஅத்தின்' கொள்கைகள் என்ன? வஹ்ஹாபி, முஃதஜிலா, கைர முகல்லித் போன்றோரின் கொள்கைகள் என்ன? என்பதை அறியாத சிலர், கண்டதையும் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகள் என்றெண்ணி மனம் போன போக்கில் கூறவும் எழுதவும் முற்பட்டுள்ளனர். 'வஹாபி'களின் சரித்திரம், அவர்களின் கொள்கைகள் பற்றி முஸ்லிம்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு சுருக்கமாக சில விஷயங்களை கீழே விபரிக்கிறேன்.

**இப்னு தைமிய்யா**

வஹாபிகளுக்கு 'இமாம்' ஆனவர் ஷைகு அப்துல் வஹ்ஹாப் நஜ்தீ என்பவர். இவருக்கு முன்பே நவீன கொள்கையை உருவாக்கி உலகில் குழப்பத்தை ஏற்படுத்தியவர் இப்னு தைமிய்யா என்பவர். இவர் ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டில் தம்மை, ஹன்பலீ மத்ஹபுடையவர் என்று சொல்லிக் கொண்டு நஜ்திலிருந்து வெளிப்பட்டார். இவர் ஒரு நல்ல அறிவாளிதான். ஆனால் அகக் கண் குருடர்.

இறைவனால் இதயத்திலும் செவியிலும் முத்திரையிடப்பட்டவர். நேத்திரத்தில் திரையிடப்பட்டவர். இவர் இயற்றிய பல நூல்களில் சிராத்தல் முஸ்தகீம் என்பதும் ஒன்று. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அஹ்லெ பைத்துக்கள், சஹாபாக்கள், இமாமெ முஜ்தஹித், வலிமார்கள் போன்றோரை தரக்குறைவாக நிந்தித்து, சொல்லத்தகாத வார்த்தைகளால் விமர்சித்திருக்கிறார். 'இமாம்'களின் ஏகோபித்த முடிவாகிய 'இஜ்மாஃ'வுக்கு முரணாக மார்க்கச் சட்டங்களை இயற்றியுள்ளார். இதுபற்றி இவரை கண்டனம் செய்தும், சபித்தும் அக்காலத்திய பிரபலமான உலமாக்களான, ஷைகுல் இமாம் முஹம்மத் பாஸீ, குத்வத்துல் முஹத்திஸீன் ஷைகு இப்னு ஹஜர் மக்கீ, ஷைகுல் முஹத்திஸீன் இஜ்ஜுத்தீன் ஜமாஆ, ஷாரிஹ் சஹீஹ் புகாரி, ஷைகுல் மஷாயிக் அஹ்மத் கஸ்த்தலானி, ஷைகுல் இஸ்லாம் தகிய்யுத்தீன் சுப்கீ ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரும், இன்னும் பல பெரியோர்களும் மறுப்புரை எழுதியுள்ளனர். இவரது வரம்பு மீறிய அநியாயத்தை பொறுக்க முடியாத மிஸ்ரு அரசு இவரை பலமுறை காவலில் வைத்தது. முடிவில் ஷாம் தேச அரசு இவரைக் கைது செய்து, திமிஷ்க் சிறையில் சாகும் வரை வைத்தது. இவர் ஹிஜ்ரி 728 ல் இறந்தார்.

**ஷைகு அப்துல் வஹ்ஹாப் நஜ்தீ**

ஹிஜ்ரி 1203 ல் துருக்கி சுல்தான் இரண்டாவது அப்துல் மஜீத் கான் மார்க்கப்பற்று நிறைந்த அரசராக இருந்து ஆட்சி செய்து காலமானார். இவருக்குப் பின் துரக்கி சாம்ராஜ்யம் முழவதும் பெரும் குழப்பமும், யுத்தமுமாகவே இருந்த போது, இச்சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட இப்னு தைமிய்யாவை பின்பற்றிய ஷைகு அப்துல் வஹ்ஹாப் நஜ்தீ சூழ்ச்சி செய்து தலைவரானார்.

அப்துல் வஹ்ஹாப்புடைய பிறப்பை குறித்து பின்வருமாறு சொல்லப்படுகிறது.

அப்துர் ரஹ்மான் புகாரி என்பவர் தமது நூலில் கூறுவதாக மதராஸ் ஹகீம் முஹம்மத் இஸ்மாயீல் சாகிப் அவர்கள் மஜ்பூத்துல் ஈமான் என்னும் தமது நூலில் எழுதுகின்றனர்.

நஜ்தை சார்ந்த 'தர்இய்யா' என்ற ஊரில் முஹம்மத் என்பவரது குமாரர் அப்துல் அஜீஸ்என்னும்பெரியார்இல்மு,தக்வா,இபாதத்போன்றவற்றில் சிறந்தவராயிருந்தார். அவரது மனைவியும் சாலிஹானவர். இந்நிலையில் ஒரு நாள் இரவு இப்லீஸ் அப்துல் அஜீஸுடைய உருவில் அப்பெண்ணிடம் சென்று கலவி செய்து சென்றான். அப்பெரியாரும் அன்றிரவு தனது நாட்டத்திற்காக மனைவியை நெருங்க, அவள் தனது கணவனைப் பார்த்து சிரித்து சற்று முன்தானே உங்களின் நாட்டத்தை நிறைவேற்றிக் கொண்டீர்களென்று சொல்ல, அவர் குழம்பிப் போய் இந்த ரகசியத்தை தமக்கு அறிவித்துத் தருமாறு இறைவனிடம் மன்றாடினார். நடந்த நிகழ்ச்சிகள் முழவதும் கனவின் மூலம் அவருக்கு அறிவிக்கப்பட்டதோடு, கர்ப்பம் தரித்துவிட்டதாயும், கார்ப்பத்திலிருந்து சிசு வெளிப்படும் வரை காத்திருந்து தலாக் கொடுத்து பின்னர் மார்க்கச் சட்டப்படி நிகாஹ் செய்து கொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டார். விடிந்ததும் நடந்ததை தன் மனைவிக்குத் தெரிவித்து அவரை விவாகரத்து செய்தார். அப்பெண் கவலை கொண்டு கருவைக் கலைக்க பல்வேறு பரிகாரங்களை செய்தும் இயலாமற் போய் முடிவில் அப்துல் வஹ்ஹாபை பெற்றெடுத்தார்.

அப்துல்வஹ்ஹாப் நல்லவரென்றும்,'ழாஹிர்,பாத்தின்' இல்முகளில் தேர்ந்தவரென்றும், 'கிதாபுத் தௌஹீது' என்னும் நூல் அவரது மகன் முஹம்மத் என்பவரால் எழுதப்பட்டது என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் நமக்கு கிடைத்த தவ்ஜீஹுல் ஹக், சைபுல் ஜப்பார், அபாத்தீலே வஹ்ஹாபியா, வஸீலயெ ஜலீலா, துல்பிகார் ஹைதரிய்யா அலா அஃனாகில் வஹ்ஹாபியா, அன்வாரே ஆப்தாயே சதாகத் போன்ற நூல்களும் இன்னும் பல்வேறு ஆதாரங்களைக் கொண்டும் வஹ்ஹாபிகளின் மூலகுரு அப்துல் வஹ்ஹாபாகவே காணப்படுகிறார். மேற்படி நூலும் இவர் இயற்றிய நூலென்றுதான் சொல்லப்படுகிறது. அப்துல் வஹ்ஹாப் தந்தை. முஹம்மத் இவரது மகன். சில நூலாசிரியர்கள் தந்தையைக் குறிப்பிடும் இடத்தில் இப்னு அப்துல் வஹ்ஹாப்பென்றும், மகனைக் குறிப்பிடும் இடத்தில் அப்துல் வஹ்ஹாப் என்றும் எழுதியுள்ளனர். இதுபோன்றே இருவரின் பிறப்பிறப்பு வருடங்களையும் குழப்பி எழுதியுள்ளனர். எனவே அப்துல் வஹ்ஹாபைப் பற்றி இறைவனே மிகவும் அறிந்தவன்.

தர்இய்யா என்னும் ஊரை அவர் தமது இருப்பிடமாக்கிக் கொண்டார். இந்நிலையில் தர்இய்யாவின் அமீரான முஹம்மதிப்னு சுஊது என்பவர் இவருக்குப் பக்கபலமாக இருந்தார். அப்துல் வஹ்ஹாப் தமது உறவினர்களை அரசு அதிகாரிகளாக்கினார். துருக்கி சுலதானின் பெயருக்குப் பதிலாக அப்துல் வஹ்ஹாப் நஜ்தியின் பெயர் குத்பாவில் இணைக்கப்பட்டது. இவர் புதியதோர் மத்ஹபை உருவாக்க முற்பட்டார். காரிஜீ, ஜாஹிரிய்யா, முஃதஜிலா போன்றோரின் கொள்கைகளிலிருந்து பலவற்றை திரட்டி நூல் ஒன்றை உருவாக்கினார். அவரது இளைய மகன் முஹம்மத் என்பவர் அந்நூலுக்கு மெருகூட்டி விரிவுரை செய்து 'கிதாபுத் தௌஹீது' என்று பெயரிட்டார்.

**'ஷைகு நஜ்த'**(இப்லீசையும் இப்பெயர் கொண்டு அழைப்பதுண்டு) **முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப்**:

ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்: 'இறைவா! எங்களின் ஷாம் தேசத்திற்கு பரக்கத் செய்வாயாக! இறைவா எங்களின் எமன் தேசத்திற்கும் பரக்கத் செய்வாயாக! என்று நபிகளார் பிரார்த்தனை புரிந்தனர். அங்கிருந்த நஜ்து வாசிகள் தமது நஜ்து தேசத்திற்காகவும் 'துஆ' செய்யுமாறு வேண்டினர். மீண்டும் நபிகளார் முன் கூறியவாறே ஷாம், எமன் தேசங்களுக்காக துஆ செய்தனர். மீண்டும் நஜ்து வாசிகள் தமது தேசத்திற்காக துஆ செய்யுமாறு கேட்கவே, மூன்றாவது முறை நபிகளார், 'நஜ்தில் அதிர்ச்சிகளும், பித்னாக்களும் உண்டாகும். அங்கிருந்து ஷைத்தானுடைய கொம்பு (கூட்டம்) வெளியாகும் என்று கூறினர். - ஸஹீஹ் புகாரி

அண்ணல் நபி சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருளுரைக்கொப்ப முதலில் நஜ்திலிருந்து இப்னு தைமிய்யா தோன்றினார். சில காலத்திற்குப்பின் அவரைப் பின்பற்றி அக்கொம்புக்கு உரமிட்டவர் அப்துல் வஹ்ஹாப் நஜ்தீ என்பவர்.

அவருக்குப் பின் ஷைகு நஜ்த் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவரைக் கொண்டே அக்கொம்பு கிளை விட்டுப் பரந்து பரவிற்று. நபிகள் நாதரின் இம்முன்னறிவிப்பு ஹிஜ்ரி 1221ல் முழுவதுமாய் நிறைவேறிற்று.

இந்த வருடத்தில்தான் நஜ்திலிருந்து பித்னாவும், பஸாதும் தலை தூக்கின. பயங்கரப் புரட்சிகளும் ஏற்பட்டன.ஷைத்தானின் சேஷ்டைகள் உச்ச நிலையடைந்தன. ஷைகு முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்னும் பெயருக்கேற்ப அதற்குரிய 'அப்ஜத்' கணக்கான 1221 ஷைத்தானிய்யத் உச்ச நிலையடைந்து தலைவிரித்தாடிய அந்த வருடத்திற்குரியதாகவே காணப்படுகிறது.

ஷைகு நஜ்த் தந்தைக்குப் பின் தலைவரான பின்னர் 'குத்பா' ஓதும்போதெல்லாம் 'நபியைக்கொண்டுசிபாரிசுதேடுபவன்காபிராவான்'என்றுஓதவதை வழக்கமாக்கிக் கொண்டார். இவருடன் பிறந்த இவரது மூத்த சகோதரர் ஷைகு சுலைமான் என்பவர் இவரைக் கண்டித்து பல தப்வாக்கள் வெளியிட்டிருக்கிறார்.

மேலும் இவர் தமது தந்தை அப்துல் வஹ்ஹாபையும், சகோதரர் முஹம்மதையும் கண்டனம் செய்து அஸ்ஸவாயிகுல் இலாஹிய்யா ஃபீ ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா என்னும் பெயரில் மறுப்பு நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். ஹனபி மத்ஹபின் பிரபலமான நூலை எழுதிய இமாம் இப்னு ஆபிதீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரத்துல் முஹ்தார் பாகம் 3, ப்ககம் 339ல் ஷைகு-நஜ்தைப் பற்றி தெளிவாகக் கூறியுள்ளனர். இதன்றி அக்காலத்தில் மக்காவின் முப்தியாயிருந்த அல்லாமா சையித் அஹ்மத் தஹ்லான் மக்கீ ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ்' அவர்கள், துரருஸ் ஸனிய்யா ஃபீ ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா என்னும் நூலிலும் இதுபற்றி விரிவாகக் கூறுகின்றனர். பின்னும் ஹிஜ்ரி 1221 ம் வருடத்திலேயே மக்காவிலுள்ள பெருமை வாய்ந்த உலமாக்கள் அனைவரும் 'ஷைகு நஜ்துக்கு' ஹதிய்யா மக்கிய்யா என்னும் பெயரில் லஃனத்துச் செய்து பத்வா (மார்க்கத் தீர்ப்பு) ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். அதன்றி, அல்லாமா அஹ்மத் பின் அலீ பஸயீ அவர்கள் பஸ்லுல் கிதாப் ஃபீ ரத்துல் ழலாலத்தி இப்னி அப்துல் வஹ்ஹாப் என்னும் பெயரிலும், அல்லாமா சையித் ஜவ்வாத் அலவீ துரைமீ அவர்கள் மிஸ்பாஹுல் அனாம் என்னும் பெயரிலும் மறுப்புரைகள் எழுதியுள்ளனர்.

'வஹ்ஹாபியப் படைத்தலைவனான சுஊத் என்பவன் ஹிஜ்ரி 1221ல் ஹஜ்ஜுக்குச் செல்வதாய் பொய் சொல்லி பெரும் படையுடன் மக்காவிற்குள் நுழைந்து பொருட்களை சூறையாடி ஆண், பெண், பாலகர், வயோதிகர், வாலிபர் என்ற பாகுபாடின்றி வெட்டிக் கொன்றான். உயிரைக் காத்துக் கொள்ள ஹரம் ஷரீபிற்குள் நுழைந்தவர்களும் விட்டு வைக்கப்படவில்லை. இஸ்லாமிய நினைவுச் சின்னங்களான மஸ்ஜிதுகளும், கப்ருகளும் தகர்த்தெறியப்பட்டன. மதீனாவில் ஹஜ்ரத் செய்யிதினா அப்பாஸ், சையிதினா இப்னு அப்பாஸ், செய்யிதினா உதுமான், செய்யிதினா பாத்திமா ஜொஹ்ரா ரலியல்லாஹு அன்ஹும் போன்றோரின் புனித மிகு மகப்றாக்களும் நொறுக்கியெறியப்பட்டன. ஸலவாத் ஓதியவர்கள் தேடிப் பிடித்து கொல்லப்பட்டனர். ஹதீது

நூல்கள், ஸலவாத், பிக்ஹு போன்ற நூல்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஜித்தா, தாயிப், மக்கா, மதீனா, கர்பலா ஆகியவையும் நிர்மூலமாக்கப்பட்டன. நபிகளாரின் புனிதமிகு ரௌலாவை தரை மட்டமாக்க முற்பட்டபோது அந்த ஷைத்தான்கள் அற்புதமாய் செத்து மடிந்தனர்.

---

இதுபோன்றே காலம் சென்ற நஜ்தின் அரசர் அமீர் அப்துல் அஜீஸ் இப்னு சுஊதுடைய காலத்தில் ஹிஜ்ரி 1343ல் ஒரு சம்பவம் நடைபெற்றது. துவக்கத்தில் ஷைகு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியை ஆதரித்து உதவி செய்த தர்இய்யா அமீர் முஹம்மத் இப்னு சுஊத் என்பவர்தான் இவருடைய மூதாதையர். ஹிஜாஸ் மீது படையெடுத்து அக்கிரம் புரிந்த வஹ்ஹாபிய்யப் படைத்தலைவன் சுஊத் என்பவனின் சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே, மக்காவின் ஷரீப் ஹுசைனை விரட்டுவதாக சொல்லிக் கொண்டு ஹிஜாஸ் மீது படையெடுத்தார். ஹஜ்ரத் செய்யிதினா ஹம்ஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ரு உட்பட நினைவுச் சின்னங்களான பல மக்பராக்கள் தகர்த்தெறியப்பட்டன. நபிகளாரின் ரௌலாவையும் தகர்க்க முற்பட்டு உலக முஸ்லிம்களின் குறிப்பாக பிரிட்டிஷ், இந்திய வாழ் இஸ்லாமியர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி அதனை கைவிட்டு விட்டனர்.

---

**வஹ்ஹாபியக் கொள்கைகள்**

இதில் வஹ்ஹாபியக் கொள்கையை பேசும் நூலான கிதாபுத் தௌஹீத் முன்பே இந்திய மௌலவி இஸ்மாயீல் சாகிப் (தப்லீக் ஜமாஅத் தலைவர்களின் மூல குரு) என்பவர் ஏற்று பின்பற்றி வந்தார். போதாக்குறைக்கு இந்நூலை உர்து மொழியில் மொழி பெயர்த்து இந்நூலுக்கு வியாக்கியானமும் செய்து தக்வியத்துல் ஈமான் என்ற பெயரில் வெளியிட்டார். வஹ்ஹாபிகள் புரட்சிக்காரர்கள் என அன்று பேசப்பட்டதால் பிரிட்டிஷார் இந்திய அரசுக்குப் பயந்து கி.பி. 1891ம் வருடத்திய ஜனக் கணிதத்தில் இவ்வியக்கத்தை 'அஹ்லெ ஹதீஸ' என்று பெயரை மாற்றிப் பதிவு செய்துள்ளனர். இவர்களின் கொள்கைகள் முழவதும் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளுக்கு முற்றும் முரணானவை. குறிப்பாக நபிமார்கள், வலிமார்கள், சஹாபாக்கள், இமாம்கள் போன்றோரை நிந்திப்பதொன்று தான் இவர்களின் பழரதானமாக கொள்கையாகும். அவையனைத்தையும் இங்கே எடுத்துக் காட்ட இயலாது. எனினும் உதாரணத்திற்காக சிலவற்றை கீழே தருகிறேன்.

கீழ்காணும் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரணான கொள்கைகளைத் தான் தப்லீக் ஜமாஅத் இயக்கம் தமது கொள்கையாகக் கொண்டுள்ளது.

1. நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஹயாத்துன் நபி' அல்ல. அவர்கள் மரணமடைந்து மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டனர் – தக்வியத்துல் ஈமான்

2. அவர்களின் ரவ்ழாவை ஜியாரத் செய்யப் போகுதல் கூடாது –தக்வியத்துல் ஈமான்

3. நபிகளாரின் ஜியாரத்தை நாடிப் பயணம் செய்தல் விக்கிரகங்களை பார்ப்பதற்குச் செல்லும் பாவத்தைப் போன்றதாகும் -கிதாபுத் தௌஹீத்

4. நபிகளாரின் ரவ்லாவிற்கு முன் மரியாதை நிமித்தம் நிற்பது கூட ஷிர்க்காகும் - தக்வியத்துல் ஈமான்

5. இறைவனது தகுதிக்கு முன் நபிகளார் செம்மானை விடத் தாழ்ந்தவர்கள் - தக்வியத்துல் ஈமான்

6. தொழுகையில் நபிகளாரின் நினைவு வருதல் ஆடு, மாடு, கழுதை ஏன் விபச்சாரத்தின் எண்ணத்தில் மூழ்குவதை விட மகா கெட்டது – ஸிராத்தே முஸ்தகீம்

7. இஜ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் மற்றும் ஷைத்தானுடைய அறிவை விட நபிகளாரின் அறிவு குறைவானது – பறாஹீனே காத்திஆ

8. நபிகளாருக்குச் செய்யும் மரியாதை, நாம் நமது மூத்த சகோதரருக்குச் செய்யும் மரியாதைக்குச் சமமானதாகவே இருக்க வேண்டும் – தக்வியத்துல் ஈமான்

9. நபிகளார் இல்முல் ஙைப் (மறைவான விசயத்தை) அறிவார்கள் என்று அறிவதே ஷிர்க் ஆகும் - தக்வியத்துல் ஈமான்

10. நபிகளாரை 'யா முஹம்மத், யாரஸூலல்லாஹ்' என்று அழைப்பவர் அனைவரும் காபிர்களாவர் - பைஜுல் பாரி, தக்வியத்துல் ஈமான், கிதாபுத் தௌஹீது

11. நபிகளாரின் ரவ்லாவை இடித்து தகர்த்தெறிதல் நன்மையாகும் -அவ்லவுல் பஹாஹீன்

12. நபிமார்கள், வலிமார்கள் போன்றோருக்கு எத்தகைய சக்தியும் கிடையாது. அவர்களுக்கு கேட்கும் ஆற்றலும் கிடையாது –தக்வியத்துல் ஈமான்

13. நபிமார், வலிமார் போன்றோர் தமக்கு சிபாரிசு செய்வார்கள் என்று எண்ணுதல் ஷிர்க்காகும் - தக்வியத்துல் ஈமான்

14. நபிமார், வலிமார் போன்றோரின் கப்ருகள் விக்கிரஹங்களுக்கு ஒப்பாகும். அவர்கள் பால் வஸீலா (உதவி) தேடுதல் ஷிர்க்காகும் –ஹிதாயத்துஸ் ஸாஹில், கிதாபுத் தௌஹீது, ஸைபுல் ஜப்பார்

15. ஆபத்தானகாலங்களில்நபிமார்கள்,ஷுஹதாக்கள்,மலக்குகள் போன்றோரை உதவிக்கு அழைத்தல் ஷிர்க்காகும் - தக்வியத்துல் ஈமான் மஃஹாஷியா

16. வலியுல்லாஹ்விடம்வஸீலாதேடுகிறவன்காபிராகும்.ஷைத்தானும் ஈமானற்றவனுமாவான் - தத்ஹீருல் இக்வான், தக்வியத்துல் ஈமான்

17. ஹழ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மார்க்கச் சட்டங்களில் முன்னூறுக்கும் அதிகமான தவறுகள் செய்திருக்கின்றனர் - பதாவா ஹதீஸா

18. ஹழ்ரத் முஅவியா ரலியல்லாஹு அன்ஹு போன்ற சில சஹாபாக்கள் பாஸிக்கானவர்கள் - அல் பயானுல் மர்சூஸ்

19. 'இன்று உங்களுக்கு உங்களின் மார்க்கத்தை பூர்த்தி செய்தேன்' என்னும் திருமறை வசனம் இறக்கப்படுவதற்கு முன் மறைந்து போன சஹாபாக்கள் அனைவரும் பரிபூரண மார்க்கத்தை உடையவர்கள் அல்ல -ஹாஷியா புகாரி – மத்பூஆ அஹ்மதீ லாகூர், பாகம் 1

20. சஹாபாக்கள், தாபியீன்கள் போன்றோரின் சொற்கள் ஏற்கக் கூடியதல்ல -- ஹாஷியா புகாரி – மத்பூஆ அஹ்மதீ லாகூர், பாகம் 1

21. இமாம் அபூ ஹனீபாவை விட ஒரு நாவிதன் மேலானவன் - கிதாபுல் ஜரஷ் அலா அபீ ஹனீபா

22. இமாம் அபூ ஹனீபா அவர்களின் பிக்ஹு சட்டங்கள் ஞானமில்லாதவை. அவர் ஷைத்தானுடைய கொம்பாவார் - கிதாபுல் ஜரஷ் அலா அபீ ஹனீபா

23. லா இலாஹ இல்லல்லாஹ் என்று தான் கலிமா சொல்ல வேண்டும். முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று சொல்வது ஷிர்க்காகும். அவ்வாறு சொல்பவன் முஷ்ரிக்காவான் - தக்வியத்துல் ஈமான்

24. மக்காவின்ஹரம்ஷரீபில்நான்குமுஸல்லாக்கள்ஏற்படுத்தியது நிந்தனைக்குரியது – கிதாபு ஸபீலுர் ரஷாத்

25. திருக்குர்ஆனின் பொருளை அறிய இதர படிப்புக்கள் அவசியமில்லை – தக்வியத்துல் ஈமான்

26. ஒருவன் பத்து திருமணம் வரை செய்து கொள்ளலாம். ஆனால் கைரே முகல்லிதுகளின் கொள்கைப்படி எத்தனை வேண்டுமானும் செய்து கொள்ளலாம் - உரூபுல் ஜாவி

27. காதிரி, நக்ஷபந்தி, சிஷ்தி போன்ற தரீகாக்கள் வழிகேடானவை – தக்வியத்துல் ஈமான்

28. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் , கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு போன்றோரது மௌலூது, பாத்திஹாக்களின் ஷீரனி, சோறு போன்றவை ஹராமாகும் - பதாவா ரஷீதிய்யா

29. கிருஷ்ணன், ராமன், லட்சுமணன் போன்றோர் உண்மையான நபிமார்களே. இவர்களைக் கொண்டும் ஈமான் கொள்ளுதல் வாஜிபாகும் – ஹிதாயத்துல் மஹ்தீ

30. நாசிக் (மாற்றக் கூடிய) மன்ஸுக் (மாற்றப்படக் கூடிய) அதாபுல் கப்ரு (மண்ணறையின் வேதனை), தக்தீரு (விதி)முஃஜிஸாத் (தெய்வாதீன சம்பவங்கள்) கராமாத் (அற்புதங்கள்) போன்றவற்றைப் பற்றிய இன்கார் (அபவாதம்) சரியே –தப்ஸீர் ஸனாயி

31. தீன் மார்க்கத்தை உடைய இமாம்களைப் பின்பற்றுதல் மலத்தை விடக் கெட்டது –மிஃயாருத் தக்லீத்

32. ஒளுவின்றி குர்ஆனைத் தொடலாம் - உரூபுல் ஜாவி

33. முழுக்கு(குளிப்பு) விதியானவர் குளிக்காமலேயே குர்ஆனைத் தொடுவதும், எடுப்பதும், வைப்பதும் ஜாயிஸாகும் - தலீலுத் தாலிப்

34. அண்ணல் நபி இறுதி நபியல்ல – ஜாமிவுஷ் ஷவாஹித்

35. நோன்பு நோற்றிருப்பவர் வேண்டுமென்றே சாப்பிட்டாலும், குடித்தாலும் அதற்கு தண்டக் குற்றம் கப்பாறா எதுவுமில்லை –தஸ்தூருல் முப்தீ

36. இறைவன் திசை, இடம் போன்'றவற்றை விட்டும் தூய்மையானவன் என்று அறியுதல் பித்அத்தும், வழிகேடுமாகும் - ஈழாஹுல் ஹக்

37. ஒவ்வொருபொருளுக்கும்ஒருஇடம்அவசியமாயிருப்பதுபோல் இறைவனுக்குரிய இடம் அர்ஷு ஆகும். ஒவ்வொரு இரவிலும் அவன் வானத்திலிருந்து பூமிக்கு இறங்குகிறான். அப்போது அர்ஷு காலியாயிருக்கின்றது. பிறகு அர்ஷுக்கோ, குர்ஸிக்கோ சென்று விடுகிறான் -ஹிதாயத்துல் மஹ்தீ

38. பிராணிகளை அறுக்கும்போது பிஸ்மில்லாஹ் சொல்லாவிட்டால் அதை உண்ணும் போது பிஸ்மில்லாஹ் சொல்லிவிட்டால் அந்த உணவு ஜாயிஸாகும் - புதூருல் அஹ்லா

39. மஸ்ஜிதுகளில் செருப்பணிந்து தொழுவதும், நடப்பதும் சுன்னத்தாகும் - ஹாஷியா புகாரி –மத்பூ அஹ்மதீ லாகூர், பாகம் 1 மெய்யான பலமான சொல் முஸ்தஹப்பாகும் -மேற்படி நூல் பாகம் 2

40. ஜும்ஆவுக்காகஜமாஅத்வேண்டுமென்றஅவசியமில்லை. இருவர் இருந்தாலும் ஒருவர் குத்பா ஓதியபின் இருவரும் ஜும்ஆ தொழலாம். ஜும்ஆ தொழுகை மற்ற நேரங்களின் தொழுகையைப்' போன்றதுதான். ஆனால் குத்பா ஒன்றுதான் வித்தியாசம். (ஜும்ஆவுக்குள்ள ஷரத்துக்கள்

அவசியமில்லை. முசாபிர், மிஸ்கீன் யாராயிருந்தாலும் சரி. குத்பா ஓதி ஜும்ஆ தொழலாம்) ஈதுத் தொழுகை ஒருவராயிருப்பினும் தொழலாம். ஜமாஅத் தேவையில்லை. –புதூருல் அஹ்லா

இதுமட்டுமல்ல. இன்னும் இது போன்ற நூற்றுக் கணக்கான விஷயங்கள் அபத்தங்கள் வஹ்ஹாபிகளின் நூல்களில் (கஷ்புல் ஹிஜாபீ, தன்பீஹுல் ழால்லீன், பைஜெ ஆம், பாறானெ ரஹ்மத், முன்ஜில் முஃமினீன், நசீஹத்துல் முஸ்லிமீன், ரிஸாலெயே ரத்துஷ் ஷிர்க், துஹ்பத்துல் முவஹ்ஹிதீன், கிபாயத்துல் இஸ்லாம் முதலியன) காணப்பபடுகின்றன. இவர்கள் குர்ஆன், ஹதீதுக்கு வழிப்பட்டு, இமாம்களைப் பின்பற்றி நடப்பதாகச் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் அதற்கு முற்றிலும் முரணாக மனம் போன போக்குப்படியே நடப்பார்கள். ஈமானை நாசப்படுத்தி மனதை இருளடையச் செய்யும் தக்வியத்துல் ஈமான் என்ற ஒரு அபத்தமான நூலை இயற்றிய மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவியைக் கண்டித்து, அவரது ஆசிரியர், உறவினர்கள் உட்பட பல உலமாக்கள் நாற்பது நூல்களுக்கும் அதிகமாக மறுப்புரை எழுதியுள்ளார்கள். அந்நூல்களின் பெயர்களையும், அதன் ஆசிரியர்களது பெயர் போன்ற விபரங்களையும்' தெரிந்து கொள் வேண்டுமாயின் பல்வேறு நாட்டு உலமாக்களால் அங்கீகரிக்கப்பட்ட அன்வாரெ ஆப்தாபெ சதாகத், பாகம் 1, பக்கம் 512ல் பார்க்க.

**திருமறையில் விக்ரஹங்கள் சம்பந்தமான வசனங்கள்**

குர்ஆன் ஹதீதுகளில் தேர்ச்சி பெற்று அவற்றுக்கு சிறிதும் மாற்றமின்றி பகுத்தறிவைக் கொண்டு அலசி ஆய்ந்து தமது சிந்தனா சக்தியைக் கொண்டு புத்திக்கும், யுக்திக்கும் ஏற்றவாறு அபிப்பிராயம் கூறி, மார்க்கச் சட்டங்களை உருவாக்கி தீர்மானமான முடிவு சொல்வோரே முஜ்தஹிதுகள். ஹிஜ்ரி 450ல் பிறந்து ஹிஜ்ரி 505ல் மறைந்த ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஜ்ஜாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள், தமது காலத்திலேயே முஜ்தஹிதுகள் இல்லை எனக் கூறியிருக்க, இன்று நம்மிடையே சிலர் குர்ஆன் வசனங்களுக்கு தமது விருப்பம்போல் வியாக்கியானம் செய்து கருத்துரை எழுத முற்பட்டுள்ளனர்.

அறிந்தோ, அறியாமலோ வஹ்ஹாபியக் கொள்கை உடையோர் சிலர் கூறும் கூற்றை கவனியுங்கள். திருக்குர்ஆனின் பொருளை அறிய நஹ்வு, மன்திக், மஆனி, அகாயித், சபப் நுஸூல் (வசனம் இறங்கிய காரணம்) தப்ஸீர் பற்றி அறிவு, ஹதீது பற்றிய ஞானம் போன்ற வேறு கல்விகள் எதுவும் தேவையில்லை எனும் அடிப்படையில் முஸ்லிம்கள் வஸீலா தேடும் இறைநேசர்களுக்கும் முஷ்ரிக்கீன்கள் தெய்வங்களாக வணங்கும் விக்கிரஹங்களுக்கும் வித்தியாசம் தெரியாது இரண்டையும் ஒன்றெனக் கருதி- அந்த விக்கிரஹங்களைப் பற்றி கீழ்காணும் குர்ஆன் வசனங்களைக் குறிப்பிட்டு, ஔலியாக்கிளடம் வஸீலா தேடக் கூடாது என்பதாக மேற்கோள் காட்டுகின்றனர்.

وَالَّذِيْنَ اتَّخَذُوا مِن دُونِهِ اَوْلِيَاءَ مَا نَعْبُدُهُمْ اِلَّا لِيُقَرِّبُوْنَا اِلَى اللهِ زُلْفٰى

யார் அல்லாஹ் அல்லாதவற்றை தங்களுக்கு ஔலியாவாக (பாதுகாவரலராக) எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் அந்த ஆண்டவர்கள் நம்மை அல்லாஹ்வுக்கு மிகச் சமீபமாக்கி வைக்கும் என்பதற்காகவே அன்றி நாம் இவற்றை வணங்கவில்லை (எனக் கூறுகின்றனர்)

لَهُ دَعْوَةُ الْحَقِّ ۖ وَالَّذِينَ يَدْعُونَ مِن دُونِهِ لَا يَسْتَجِيبُونَ لَهُم

'அவனே (நாம் பிரார்த்தனை செய்து) அழைக்கத் தகுதியுடையோன். எவர்கள் அவனையன்றி (மற்றவர்களை) அழைக்கின்றார்களோ, அவர்களுக்கு அவை யாதொன்றையும் கொடுத்து விடாது. –அல்குர்ஆன் 13-14

أُولَٰئِكَ الَّذِينَ يَدْعُونَ يَبْتَغُونَ إِلَىٰ رَبِّهِمُ الْوَسِيلَةَ أَيُّهُمْ أَقْرَبُ وَيَرْجُونَ رَحْمَتَهُ وَيَخَافُونَ عَذَابَهُ ۚ إِنَّ عَذَابَ رَبِّكَ كَانَ مَحْذُورًا

3. இவர்கள் அழைக்கும் ஆண்டவர்களுமே (தங்களுக்காக)தங்கள் இறைவனிடம் சிபாரிசு செய்வதற்கு (இறைவனிடம்) நெருங்கியவர் யாரென்பதை தேடிக் கொண்டு, அவனது அருளையே எதிர்பார்த்து, அவனதுவேதனைக்குப்பயப்படுகின்றனர்.ஏனெனில்,திடனாக உம்மிறைவனின் வேதனையோ மிக மிகப் பயப்படக் கூடியதே. – அல்குர்ஆன் 17:57

இது மட்டுமல்ல. திருக்குர்ஆனில் இன்னும் இது போன்ற பலவசனங்களை தர்ஜுமத்துல் குர்ஆன் பி அல்தபில் பயான் என்னும் தமிழ் தப்ஸீரிலிருந்து ஆதாரமாகக்காட்டுகின்றனர். மேற்கண்ட மேற்கோள்கள் அனைத்தும் விக்ரகஹ்களைப் பற்றிவையே. இவ்வசனங்களின் உண்மைப் பொருளை மறைத்து மக்களை வழி கெடுக்கப் புரட்டுக்கள் பல செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்ட முதல் வசனத்தில் 'ஆண்டவர்கள்' என்பதற்கு தெய்வங்கள் என்றும், இரண்டாம் வசனத்தில் (மற்றவர்களை) என்பதற்கு (மற்ற பொய்யான தெய்வங்களை பிரார்த்தனை செய்து) என்றும், மூன்றாம் வசனத்தில் 'ஆண்டவர்களுமே' என்பதற்கு 'பயப்படுகின்றனர்' என்பதற்கு பயப்படுகின்றன என்றும், தெய்வங்களே என்றும், அவர்கள் குறிப்பிடும் தர்ஜுமத்துல் குர்ஆன் பி அல்தபில் பயான் என்னும் தமிழ் தப்ஸீரில் காணப்படுகிறது. மேலும் மூன்றாம் வசனத்திற்குரிய பொருளை விரிவாகக் கூறும்போது,

قُلِ ادْعُوا الَّذِينَ زَعَمْتُم مِّن دُونِهِ فَلَا يَمْلِكُونَ كَشْفَ الضُّرِّ عَنكُمْ وَلَا تَحْوِيلًا

(நபியே! இணை வைத்து வணங்குவோரை நோக்கி) நீர் கூறும்: அல்லாஹ்வையன்றி (வேறு தெய்வங்கள் இருப்பதாக) நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களே அவைகளை நீங்கள் (உங்கள் கஷ்டங்களை நீக்க) அழையுங்கள். (அவ்வாறு அழைத்தால்) அவை உங்களுடைய யாதொரு கஷ்டத்தை நீக்கி வைக்கவோ அல்லது (அதனைத்) தட்டிவிடவோ சக்தியற்றவை(என்பதை அறிந்து கொள்வீர்கள்) என்னும் 17-56 வது வசனம் வேண்டுமென்றே விடப்பட்டுள்ளது. இப்போது தப்ஸீரில் கண்ட சொற்களை அந்தந்த இடத்தில் அமைத்து, மீண்டும் வாசிப்பீர்களேயாயின் உண்மை பளிச்சென விளங்கும்.

இவ்வாறே குர்ஆனில் விக்கிரகங்களின் செயலற்ற தன்மையை ஒரு அற்ப ஈக்கு ஒப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும் 22-73 வசனமும், விக்ரஹங்களுக்கு நன்மையோ, தீமையோ, உயிர்ப்பிக்கவோ, மரிக்கச் செய்யவோ முடியாதென்ற சக்தியற்ற தன்மையை காட்டிடும் 25-3 வசனமும், விக்ரஹங்களை இரட்சகர்களாக எடுத்துக் கொண்டோரை சிலந்திக் கூட்டுக்கு உவமைப்படுத்தி கூறப்படும் 29-41,42ம் வசனமும் இன்னும் இவை போன்ற வசனங்களையும், பின்னும் குர்ஆனில், 'வலி' 'ஔலியா' எனக் காணப்படும் வாக்கியங்களைக் குறிப்பிட்டும் வலியுல்லாஹ்விடம் வஸீலா தேடக் கூடாது என்பதற்குரிய ஆதாரங்களைக் காட்டுகின்றனர்.

**'வலீ' எனும் பதப் பிரயோகங்கள்:**

வலீ அல்லாஹ் தன்னையும், ரஸூல் அவர்களையும், இன்னும் முஸ்லிம்களையும் 'வலீ' என்று திருமறையில் கூறியிருப்பதுடன், யூதர், கிறித்துவர், காபிர், இப்லீஸ், ஷைத்தான் மற்றும் விக்ரஹம், சூரியன், சந்திரன், நெருப்பு போன்ற 'இலாஹுல் பாத்திலான' தெய்வங்கள் விசயத்திலும் வலீ 'ஔலியா' என்னும் பதங்கள் எந்தக் கருத்தில் பேசப்பட்டுள்ளன என்பவனவற்றை இறைவன் குர்ஆனில் பல்வேறு இடங்களில் பேசியிருப்பதை கீழே காண்க.

www.sufimanzil.org

إِنَّمَا وَلِيُّكُمُ اللَّهُ وَرَسُولُهُ وَالَّذِينَ آمَنُوا الَّذِينَ يُقِيمُونَ الصَّلَاةَ

'திடனாக உங்களுக்கு 'வலீ' (காரியதரிசி) அல்லாஹ்வும், ரஸூலும் தொழுகையை நிறைவேற்றுகிறவர்களும் (முஸ்லிம்களும்)தான்.' –அல்குர்ஆன் 5-55

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَتَّخِذُوا الْيَهُودَ وَالنَّصَارَىٰ أَوْلِيَاءَ ۘ بَعْضُهُمْ أَوْلِيَاءُ بَعْضٍ ۚ

ஓ! விசுவாசிகளே! யூதர்களையும், கிறித்துவர்களையும் 'ஔலியா'வாக (காரிய கர்த்தர்களாக) ஆக்கிக் கொள்ளாதீர்கள். அவர்களில் சிலர் சிலருக்கு 'ஔலியா'க்களே(காரியகர்த்தர்களே). –அல்குர்ஆன் 5-51

لَّا يَتَّخِذِ الْمُؤْمِنُونَ الْكَافِرِينَ أَوْلِيَاءَ مِن دُونِ الْمُؤْمِنِينَ ۖ

'விசுவாசிகளைத் தவிர்த்து காபிரீன்களை (நிராகரிப்போரை)த்தங்கின் 'ஔலியா'வாக (சிநேகிதர்களாக) எடுத்துக் கொள்ளக் கூடாது –அல்குர்ஆன் 3-28

وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ كَانَ مِنَ الْجِنِّ فَفَسَقَ عَنْ أَمْرِ رَبِّهِ ۗ أَفَتَتَّخِذُونَهُ وَذُرِّيَّتَهُ أَوْلِيَاءَ مِن دُونِي وَهُمْ لَكُمْ عَدُوٌّ ۚ بِئْسَ لِلظَّالِمِينَ بَدَلًا

'மலக்குகளை நோக்கி, ஆதமுக்கு ஸுஜூது செய்யுங்கள் என்று நாம் கூறியதை நினைத்துப் பாரும். இப்லீஸைத் தவிர அவர்களனைவரும் ஸுஜூது செய்தனர். அவனோ ஜின்களின் இனத்தைச் சார்ந்தவன். அவன் தன்னிறைவனது கட்டளைக்கு மாறு செய்து விட்டான். ஆகவே நீங்கள் என்னையன்றி அவனை (இப்லீஸை)யும் அவனது சந்ததிகளையும் 'ஔலியா'வாக (இரட்சகர்களாக)எடுத்துக் கொள்வீர்களா? அவர்களே கொடிய விரோதிகளாகவே இருக்கிறார்கள்.' – அல்குர்ஆன் 18-50

فَرِيقًا هَدَىٰ وَفَرِيقًا حَقَّ عَلَيْهِمُ الضَّلَالَةُ ۗ إِنَّهُمُ اتَّخَذُوا الشَّيَاطِينَ أَوْلِيَاءَ مِن دُونِ اللَّهِ وَيَحْسَبُونَ أَنَّهُم مُّهْتَدُونَ

'ஒரு கூட்டத்திற்கு நேர் வழி காட்டினான். இன்னும் ஒரு கூட்டத்திற்கு அவர்கள் மீதுவழிகேடு ஸ்திரமாகிவிட்டது. (ஏனெனில்) திடனாக இவர்கள் அல்லாஹ்வையன்றி ஷைத்தான்களை (தங்கள் தலைவர்களாக) 'ஔலியா'வாக ஆக்கிக் கொண்டு தாங்களே திடனாக நேர்வழி பெற்றவர்களென்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்' –அல்குர்ஆன் 7-30

اتَّبِعُوا مَا أُنزِلَ إِلَيْكُم مِّن رَّبِّكُمْ وَلَا تَتَّبِعُوا مِن دُونِهِ أَوْلِيَاءَ ۗ قَلِيلًا مَّا تَذَكَّرُونَ

(ஜனங்களே) உங்கள் ரப்பிடமிருந்து உங்களிடமிருந்து இறக்கப்பட்ட (இ)தைப் பின்பற்றுங்கள். இன்னும் இதையன்றி (உங்கள் காரியஸ்தர்களான தெய்வங்களை) 'ஔலியா'வாகப் பின்பற்றாதீர்கள். –அல்குர்ஆன் 7-3

ஆதலால் வலீ, ஔலியா என்னும் பதங்கள் குறிப்பிட்ட ஒருவரைக் குறிக்கக் கூடியதல்ல என்பதையும், சூழ்நிலைக்குத் தக்கவாறு பலரைக் காண்பிக்கக் கூடியவை என்பதையும் அறியாது

வலியுல்லாஹ்வுக்கும், விக்ரஹத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் குர்ஆனுக்கு தமது விருப்பம் போல் வியாக்கியானம் செய்வது விதண்டாவாதம் புரிவது அறிவீனமாகும்.

**விருப்பம் போல் குர்ஆனுக்கு விரிவுரை செய்யலாகாது**.

குர்ஆனில் (முஹ்க்கமாத்) ஒரு விசயத்தை விளக்கமாக சொல்லக் கூடிய வசனங்களும், விளக்கமின்றி மறைவான பொருள் கொண்ட (முத்தஷாபிஹாத்) போன்ற வசனங்களும், பல்வேறு கருத்தை உள்ளடக்கிய வாக்கியங்களும் உள்ளன. இதைப் பற்றி இறைவனே திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான்.

هُوَ الَّذِي أَنزَلَ عَلَيْكَ الْكِتَابَ مِنْهُ آيَاتٌ مُّحْكَمَاتٌ هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ ۖ فَأَمَّا الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ وَابْتِغَاءَ تَأْوِيلِهِ ۗ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلَّا اللَّهُ ۗ وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ يَقُولُونَ آمَنَّا بِهِ كُلٌّ مِّنْ عِندِ رَبِّنَا ۗ وَمَا يَذَّكَّرُ إِلَّا أُولُو الْأَلْبَابِ

'(நபியே) அவனே இவ்வேதத்தையும் உம்மீது அருளினான். இதில் (தெளிவாகவும்) குறிப்பாக(வும்) உள்ள அர்த்தத்தையுடைய வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படை. அன்றி பல அர்த்தங்களுடைய வசனங்களும் இருக்கின்றன. எவர்களது இதயங்களில் மாறுபாடு இருக்கின்றதோ, அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தஎண்ணி (இத்தகைய வசனங்களுக்கு தவறான) பலஅர்த்தங்களையே தேடிப் பின்பற்றுவார்கள். ஆயினும் இதன் உண்மை கருத்தை அல்லாஹ்வையன்றி ஒருவரும் அறியார். ஸ்திரமான கல்விமான்களோ, (அதன்கருத்துதங்களுக்குபூரணமாக விளங்காவிடினும்)இதையும் நாங்கள் விசுவாசித்தோம். (இவ்விருவகை வசனங்களனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான் என்றுகூறுவார்கள். அறிவுடையோரையன்றி மற்றெவரும் (இவைகளை கொண்டு) நல்லுபதேசமடைய மாட்டார்கள்.' –அல்குர்ஆன் 3-7

திருமறையில் உள்ள சில வசனங்களை சில வசனங்கள் மாற்றக் கூடியதாயிருக்கின்றன. இதற்கு 'நாஸிக்'என்றும், 'மன்ஸூக்' என்றும் சொல்லப்படும். இதுபற்றி இறைவன் திருமறையில் பின்வருமாறு சொல்கிறான்.

مَا نَنسَخْ مِنْ آيَةٍ أَوْ نُنسِهَا نَأْتِ بِخَيْرٍ مِّنْهَا أَوْ مِثْلِهَا ۗ أَلَمْ تَعْلَمْ أَنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ

'நாம் ஒரு வசனத்தை மாற்றி விடுவோமாயின்,அல்லது அதை மறக்கடித்து விடுவோமாயின், அதை விட மேலானதை அல்லது அதுபோன்ற (வேறு வசனத்)தைக் கொண்டு வருவோம். திடனாக அல்லாஹ் அனைத்து வஸ்துக்களின் மீதும் ஆற்றலுள்ளவன் என்பதை நீர் அறியவில்லையா? –அல்குர்ஆன் 2-106

'நாஸிக், மன்ஸூக் பற்றிய சட்டங்களை அறிந்து கொள்ளாதவரும் 'ஹலால், ஹறாம்' இதுதான் என்பதை அறியாதவரும் குர்ஆனின் (தஃவீல்) வலிந்துரையை அறியமாட்டார்.' –நூல்: கவாத்திமுல் ஹிகம்

'குர்ஆனுக்கு விரிவுரை செய்பவர் நாஸிக், மன்ஸூக் பற்றிய விசயங்களை அறிந்தவராக இருக்க வேண்டும். இதை தெரியாதவர் திருமறைக்கு வியாக்கியானம் செய்வது கூடாதென்பதே மார்க்க நிபுணர்களின் ஏகோபித்த தீர்மானமாகும். - தப்ஸீர் -இத்திகான்

மேற்கண்ட நஹ்வு, மன்திக், மஆனி, அகாயித், சபப் நுஜூல், தப்ஸீர், ஹதீது, முஹ்க்கமாத், முத்தஷாபிஹாத், நாஸிக், மன்ஸூக், ஹலால், ஹராம் போன்றவற்றை அலட்சியப்படுத்தி, திருமறைக்கு விரிவுரை செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும், நிபந்தனைகளையும் புறக்கணித்து, வேத வியாக்யானிகளின் முன் மாதிரியையும் ஒதுக்கித் தள்ளி தமது மனம் போன போக்கில் பொருள் கூறி வியாக்கியானம் செய்யச் சிலர் முனைந்திருப்பது காலக் கொடுமையன்றி வேறென்ன? இத்தகையோர் 'காபிர்' ஆவார். இவர்களுக்கு இருப்பிடம் நரகம் என்று இறைவனும், இறைத்தூதரும் அறிவித்துள்ளனர்.

وَمِنَ النَّاسِ مَن يُجَادِلُ فِي اللَّهِ بِغَيْرِ عِلْمٍ وَلَا هُدًى وَلَا كِتَابٍ مُّنِيرٍ

ثَانِيَ عِطْفِهِ لِيُضِلَّ عَن سَبِيلِ اللَّهِ ۖ لَهُ فِي الدُّنْيَا خِزْيٌ ۖ وَنُذِيقُهُ يَوْمَ الْقِيَامَةِ عَذَابَ الْحَرِيقِ

'யாதொரு கல்வியும், யாதொரு தர்க்கரீதியான ஆதாரமும், யாதொரு வேத நூலின் தெளிவான ஆதாரமும் இன்றி மனிதர்களில் பலர் அல்லாஹ்வைப் பற்றி தர்க்கிக்கின்றனர். (ஜனங்களை) அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து திருப்பிவிடும் பொருட்டு மமதை கொண்டு (இவ்வாறு செய்கின்றனர்). இம்மையில் அவர்களுக்கு இழிவுதான். மறுமையிலோ நெருப்பின் வேதனையை அவர்கள் சுகிக்குமாறு செய்வோம்.' –அல்குர்ஆன் 22-8,9

'குர்ஆனுக்கு தமது யோசனையைக் கொண்டு வியாக்கியானம் செய்வானாயின் அவன் காபிர் ஆகி விட்டான். -ஹதீது

'எவன் தனது அறிவைக் கொண்டு குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்கிறானோ, அவன் தனது இடத்தை நரகத்தில் எடுத்துக் கொள்வான்.' -ஹதீது

எனவே இனியாவது இறைத் திருவசனமாகிய பரிசுத்ததத் திருவேதத்திற்குத் தமது நோக்கம் போல் பொருள் கூறி வியாக்கியானம் செய்வதை விட்டும் பாவமன்னிப்புத் தேடி தம்மை பாதுகாத்துக் கொள்வார்களாக. ஆமீன்.

**வலியுல்லாஹ்க்கள்**

இனி வலியுல்லாஹ் யாரென்பதைப் பார்ப்போம். அல்லாஹ்வின் கட்டளைகளையும், அண்ணல் நபிகளாரின் நற் போதனைகளையும் உயிராக எடுத்து, தீன் எனும் மார்க்க நெறியில் நடந்து ஷரீஅத் (சரியை) தரீகத் (கிரியை) ஹகீகத் (யோகம்) போன்றவற்றை படிப்படியாக் கடந்து, மஃரிபத் (ஞானம்) என்னும் சாஸ்வதப் பேரின்ப வீட்டையடைந்து நித்திய ஜீவன் பெற்றவர்களே 'வலியுல்லாஹ்'க்களாவார்கள்.

'அல்லாஹ் விசுவாசிகளுக்கு 'வலியாக' (காரியஸ்தனாக) இருக்கிறான். அவர்களை இருளில் இருந்து வெளிச்சத்தின் பால் வெளியேற்றுகிறான்' என்று திருமறையில் 2257ல்கூறியுள்ளான். எனது உம்மத்திலுள்ள உலமாக்கள்' பனீ இஸ்ராயீல்களிலுள்ள நபிமார்களைப் போன்றவர்கள்' என்றும், 'நபிமார்களுடைய வாரிசுகள்' வந்துள்ள ஹதீதுகளை மேற்கண்ட 2-257லம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், நபிமார்களின் வேலையாகிய நன்மையை ஏவி தீமையை விலக்கும் இஷாஅத்தே இஸ்லாம் புரிவதுடன், அஞ்ஞான இருளில் இருந்து மெய்ஞான வெளிச்சத்தின் பக்கம் ஈர்த்து வருபவர்களான கௌஸ், குத்பு, அப்தால், அவ்தாத் போன்றோரே உண்மையான வலியுல்லாஹ்க்களாவார்கள். ஔலியாக்களுக்கு அச்சமோ, கவலையோ இல்லையென்றும், இம்மையிலும், மறுமையிலும் அவர்களுக்கு சுபமுண்டு என்ற வாழ்த்தும் திருமறையில் கூறப்பட்டுள்ளன.

**வஸீலா தேடுதல்**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الْأَمْرِ مِنكُمْ

'விசுவாசிகளே! அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள். இன்னும் (அவனது) ரஸூலுக்கும், உங்களில் நின்றும் அதிகாரமுள்ளவர்களுக்கும் வழிப்படுங்கள். –அல்குர்ஆன் 4-59

அதிகாரமுள்ளவர்கள் என்பதன் கருத்து இஸ்லாமிய மார்க்கத்தை பரப்பக் கூடிய உலமா, ஒளலியாக்கள் தான் என்று தப்ஸீர் கபீர், பாகம் 3, பக்கம் 243, தப்ஸீர் ரூஹுல் பயான், பாகம் 1 பக்கம் 624 ல் கூறப்பட்டுள்ளது. தப்ஸீர் ரூஹுல் பயான் மொத்தம் பத்து வால்யூம்களைக் கொண்டதாகும்.

ஒளலியாக்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிரதிநிதிகளாவர். இன்னோர் எதார்த்தத்தில் அல்லாஹ்வுடைய பிரதிநிதிகளே. இவர்களைத் தொடர்வதே நேர்வழியாகும். இன்னும் இவர்கள் அல்லாஹ்வுடைய திருநாமங்களின் பண்புகள் வெளியாகும் தோற்றமாயிருப்பதால், இவர்கள் அவனுடைய பிரதிநிதிகளாயிருந்து கட்டளைகளை வெளிப்படுத்துகின்றனர். எனவே இவர்களுக்கு வழிப்படுவது (ஹகீகத்) எதார்த்தத்தில் அவனுக்கே வழிப்படுவதாகும். இவர்களைக் கொண்டு வஸீலா –சிபாரிசு, உதவி தேடுதல் குப்ருமல்ல, ஷிர்க்குமல்ல.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَابْتَغُوا إِلَيْهِ الْوَسِيلَةَ

'விசுவாசிகளே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். இன்னும் அவனளவில் நெருங்குவதை (வஸீலாவை)த் தேடுங்கள்.' – அல்குர்ஆன் 5-35

வஸீலா என்பதன் கருத்து ஒளலியா, காமிலீன் என்பதாக மேற்கண்ட வசனத்திற்கு தப்ஸீர் ரூஹுல் பயான், பாகம் 2 பக்கம் 388ல் விரிவுரை கூறப்பட்டுள்ளது.

اُطْلُبُوا الْحَوَائِجَ اِلٰى ذَوِى الرَّحْمَةِ مِنْ اُمَّتِىْ

'எனது ரஹ்மத்துடைய உம்மத்துக்கள் பால் உங்கள் தேவைகளைத் தேடிக் கொள்ளுங்கள்' என்று நபிகளார் நவில்கின்றனர். ரஹ்மத்துடைய உம்மத்துக்கள் என்பதன் கருத்து ஒளலியாக்கள் தான் என்பதாக ஷரஹு ஜாமிவுஸ் ஸகீர் என்னும் நூலின் முதல் பாகத்தில் விரிவுரை செய்யப்பட்டுள்ளது.

اِنْ اَرَادَ عَوْنًا فَلْيَقُلْ يَاعِبَادَ اللّٰهِ اَعِيْنُوْنِىْ يَاعِبَادَ اللّٰهِ اَعِيْنُوْنِىْ يَاعِبَادَ اللّٰهِ اَعِيْنُوْنِىْ

'(அல்லாஹ்வுடைய அடியார்களிடம்) உதவி தேட வேண்டுமானால் அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள். அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள். அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கூறுவீர்களாக' என்று கூறும் நபிகளாரின் மற்றுமோர் ஹதீதுமுண்டு. அல்லாஹ்வின் அடியார் என்பதன் கருத்து, முஸ்லிமான மனு, ஜின், மலக்கு, ரிஜாலுல் கைப், அப்தால், அவ்தாத் போன்றோர் உயிரோடிருப்பினும் சரி, மரணித்திருப்பினும் சரி என்பதாய் பத்ஹுல் ஹக் நூலின் பக்கம் 71ல் கூறப்பட்டுள்ளது.

اِذَاتَحَيَّرْتُمْ فِى الْاُمُوْرِ فَاسْتَعِيْنُوْا بِاَهْلِ الْقُبُوْرِ

'காரியங்களில் நீங்கள் திகைப்படைந்து விடுவீர்களேயாயின் கப்ருகளை உடையோரைக் கொண்டு உதவி தேடிக் கொள்ளுங்கள். -ஹதீது

கப்ருகளை என்று குறிப்பாகக் கப்ருகளை சுட்டிக் காட்டும் நபிகளாரின் இன்னோர் பொன்மொழியும் உண்டு. கப்ருகளை உடையோர் என்பதன் கருத்து ஔலியாக்களே என்பதாய் மிர்காத் ஷரஹு மிஷ்காத், பாகம் 2, பக்கம் 408லும் தப்ஸீர் ரூஹுல் பயான், பாகம் 5, பக்கம் 380லும் ஆதாரப் பூர்வமாகக் காணப்படுகிறது.

'வஸீலாவைக் குறிக்கும் ஹதீதுகள் மேற்கண்டவை மட்டும்தான் என எண்ண வேண்டாம். இதுபோன்று இன்னும் பல உள்ளன. விரிவஞ்சி விடுகிறோம். எனவே நபிமார்கள், வலிமார்கள், சாலிஹீன்கள் பால் வஸீலா தேடுதல் கூடும் என்பது குர்ஆன், ஹதீதைக் கொண்டு உறுதியாகின்றது.

**'மையித்துக்கு கேட்கும் சக்தியுண்டு**

மையித் இறந்து போன ஔலியாக்களுகு;கு கேட்கும் சக்தியில்லையென்றும், மனிதன் உயிரோடு இருக்கும் வரை தான் தனக்கோ, பிறருக்கோ இறைவனிடம் துஆ செய்யும் சக்தியைப் பெற்றுள்ளான். அதன்பின் அந்த சக்தி 'கப்ரு' எனும் 'பர்ஜக்கு' தொடாந்து செல்வதில்லையென்றும், இதுபற்றி சஹீஹான ஹதீதுகளில் எந்த ஆதாரமுமில்லையென்றும் சிலர் கூறுகின்றனர்.

'பத்ரு யுத்தத்தில் மரணமடைந்த காபிர்களின் பிரேதங்களை நோக்கி 'எங்கள் இறைவன் கூறிய வாக்குறதியை நாங்கள் உண்மையாக பெற்றுக் கொண்டோம்.

உங்கள் நாயன் கூறிய வாக்குறதியை நீங்கள் உண்மையாக பெற்றுக் கொண்டீர்களா? என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டபோது, 'அல்லாஹ்வின் தூதரே! இறந்தோர்தங்களின் வார்த்தைகளை எவ்வாறு செவியேற்பர் என்று உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்கவே, உங்களை விட அவர்கள் நக்கு கேட்பர். உங்களுக்கு வெளிக்காதுகள் உண்டு. அவர்களுக்கு ஆத்மார்த்தமான செவியுண்டு. அதனால் அவர்கள் எல்லாவற்றையும் கேட்கின்றனர் என்று விடை தந்தனர். –நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

'மையித் உனது பாதரட்சையின் சப்தத்தையும் கேட்கின்றது. –நூல்: ஸஹீஹ் புகாரி

இதுபோன்ற ஹதீதுகள் பவற்றை ஹாபிஸ் அஹாதீஸெ நபவிய்யா இமாமெ முஜ்தஹித் ஷைகு ஜலாலுத்தீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஷரஹுல் ஸுதூர் ஃபீ ஷரஹில் மௌத்தா வல் குபூர்' என்னும் நூலில் விரிவாக கூறியுள்ளனர்.

உண்மையை மறைத்து, ஹதீதில் ஆதாரமில்லை என்று கூறுதல் வழிகேடாகும். உலக ஆசாபாசங்களில் உழன்று திரிந்தோர் பலர் இறந்தபின், பிசாசாகப் பிடித்துக் கொண்டு ஆட்டுவதைக் கண்கூடாக பார்க்கிறோம். மறைவாக நாம் செய்யும் சில செயல்களையும் இரகசியமாக நாம் பேசுவதையும் கூட இறந்து போன சில நல்லடியார்களின் ஆவி கூறுவதையும் கண்ணால் காண்கிறோம். பார்க்காமலும், கேட்காமலும் அந்த ஆவி எப்படிக் கூறுகிறது? இதுபோன்ற ஆவிகள் தமது உறவினர்களுக்கு ஆபத்தைப் பற்றி எச்சரிக்கை செய்வதையும், உதவிகள் செய்வதையும், விரோதிகளை அழித்தொழிப்பதையும் சிலர் அனுபவித்திருக்கின்றனர்.

இப்படிப்பட்ட விஷயங்கள் பல பத்திரிக்கைகளிலும் வெளிவந்துள்ளன. வந்து கொண்டுமுள்ளன. இது போன்ற பல வரலாற்றுச் சம்பவங்கள் எவ்வளவோ இஸ்லாமிய நூல்களில் காணப்படுகின்றன.

வஹ்ஹாபியக் கொள்கையின் மூல குரவான இப்னு தைமிய்யாவின் பிரதான சீடர்களில் ஒருவரான இப்னு கையிம் என்பவர் தமது நூலான 'அர்ரூஹ்' என்பதில் சொல்லியிருப்பதை உதாரணத்திற்கு சிலவற்றை இங்கே தருகிறோம்.

சஃப் பின் ஜுதாமா, அவ்ப் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹுமா இருவரும் சகோதரர் முறை கொண்ட நபித் தோழர்கள். இவர்களில் யார் முதலில் மரணமடைந்தாலும் இறந்தவர் உயிரோடிருப்பவரை வந்து சந்திக்க வேண்டுமென முடிவு செய்திருந்தனர். இருவரில் முதலில் சஃப் இறந்தார். அவரை அவ்ப் கனவில் கண்டு, இறைவன் உம்மை எவ்வாறு நடத்தினான் என்று கேட்க, வேதனைக்குப் பின் இறைவன் தன்னை மன்னித்துவிட்டதாக சொன்னார். அப்போது சஃபின்கழுத்தில் கரும்புள்ளி ஒன்று இருப்பதைக் கண்ட அவ்ப் அது என்னவென்று கேட்க, யூதர் ஒருவரிடம் பத்து தீனார் கடன் வாங்கியிருந்தேன். அதை ஒரு பையில் போட்டு வீட்டில் வைத்துள்ளேன். அதை எடுத்து அந்த யூதரிடம் கொடுத்து விடுங்கள். அதற்குரிய அடையாளம் தான் இந்த கரும்புள்ளி என்று சொன்னவர், 'சகோதரரே! எனக்குத் தெரியாத எதுவும் என் வீட்டில் நடப்பதில்லை என்பதை நீர் உறுதியாக நம்பும். நான் வளர்த்த பூனை சில நாட்களுக்கு முன் இறந்து போனதையும் நான் அறிவேன். இன்னும் ஆறு நாட்களில் என் மகளும் இறந்து போவாள் என்பதையும் தெரிந்து கொள்ளும்' என்று கூறினார்.

விடிந்ததும் சஃபுடைய வீட்டிற்கு அவ்ப் சென்றபோது, அங்கு பை ஒன்று தொங்கிக் கொண்டிருப்பதை பார்த்து, அதைத் திறந்து பார்க்க, அதில் தீனார் இருப்பதைக் கண்டார். அந்த யூதரை அழைத்து, சஃபுக்கு நீர் எதுவும் கொடுக்க வேண்டியுள்ளதா என்று கேட்க, அதற்கவர், சஃபுக்கு இறைவன் கிருபை செய்வானாக. அவர் நல்ல மனிதர். நான் அவருக்குத் தர வேண்டியதை கொடுத்து விட்டேன். ஆனால் அவருக்குத்தான் நான் பத்து தீனார் கொடுத்தேன். அதையும் ஒரு பையில் போட்டுக் கொடுத்தேன் என்றார்.

அவரிடம் அவ்ப் அப்பையை தந்தபோது நான் கொடுத்த கொடுத்த பை தான் என்று இறைவன் மீது பிரமாணம் செய்து கூறினார் அந்த யூதர். சஃப் இறந்த பின் வீட்டில் என்ன நிகழ்ந்ததென்று வீட்டிலுள்ளோரிடம் அவ்ப் விசாரிக்க, பல நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கூறி, சில நாட்களுக்கு முன் பூனை இறந்து போனததையும் கூறினார். சஃபின்மகளைப் பற்றி கேட்டபோது, அக்குழந்தை விளையாடிக் கொண்டிருப்பதாகக் கூறி அதனை அழைத்து வந்தனர். அக்குழந்தையை அவ்ப் அணைத்தபோது, உடல் சூடாக இருப்பதை உணர்ந்து நன்கு கவனிக்குமாறு கூறிவிட்டுச் சென்றார். அதன்பின் ஆறாம் நாள் அக்குழந்தை இறந்து விட்ட செய்தி அவருக்குக் கிடைத்தது.

திரேகம் என்ற ஒன்றைத் தவிர ஆன்மா என்று எதுவுமில்லை என்று கூறிவரும் மேலை நாடுகளில் சில வருடங்களாக ஆன்மாவைப் பற்றியும், ஆவி பற்றிய ஆய்வும் இப்போது நடந்து வருகிறது. சர் ஆர்தர் கானன்டாயில், சர். ஆலிவர் லாட்ஜ் போன்ற பல அறிஞர்கள், மனிதன் தனது இறப்புக்குப் பின் அழிந்து போவதில்லை என்பதை பல்வேறு அனுபங்கள் வாயிலாக உணர்ந்திருப்பதாகக் கூறுகின்றனர்.மரணத்திற்குப்பின் மனிதனின் நிலை என்பது மிகவும் முக்கியமானது. அதை பற்றிய இஸ்லாமியக் கொள்கைகளும் அதில் மறைந்துள்ள விஷயங்களும் அலாதியானவை. ஆனால் மேலை நாட்டினர் இதுபற்றி வியந்து பேசும் அனுபவ சம்பவங்களை கீழே உங்களின் பார்வைக்காகத் தருகிறேன்.

கீரோ என்னும் புனைப் பெயருடன் பிரபல ஜோதிடராயும், ரேகை சாஸ்திரியாகவும், மானஸ சக்தி வாய்ந்தவராகவும் திகழ்ந்த ஆங்கில கோமகன் லார்டு சாலின் என்பவரை உலகம் நன்கு அறியும். நீண்ட பிரயாணங்கள் பல செய்து, பல்வேறு நாட்டுக் கலைகளைக் கற்று, விஞ்ஞானம் நிறைந்த மேனாட்டு மன்னர்கள் பலரையும் அறிஞர்களையும் பிரமிக்கச் செய்த ஓர் ஞானி, இறந்து போன ஒரு ஆவியின் முதல் அனுபவம் பற்றி இவ்வாறு கூறுகிறார். உயிரோடு இருப்பவர்களைப் போல் இறந்தவர்கள் மீண்டும் இவ்வுலகிற்கு வருவது சாத்தியமென்று நான் நம்பியதில்லை. இங்கே நான் சொல்லவரும் அனுபவம் எனது நம்பிக்கையை மாற்றிவிட்ட ஒன்றாகும். 1896ம் ஆண்டு மார்ச் மாதம்

நான் மேற்கு அமெரிக்காவிலருந்தேன். என் தந்தை மரணத் தருவாயில் இருப்பதாக தகவல் கிடைக்க, உடனே லண்டன் திரும்பினேன். தந்தையை கண்டபோது, அவர், மகனே! சில விசயங்களை உன்னிடம் சொல்லி விட்டுப் போக வேண்டுமென்பதற்காகவே மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறேன்.'என்குடும்ப சம்பந்தமான தஸ்தாவேஜுகள்' என்று கூற முயன்றவர், அவை எங்கிருக்கின்றன என்று கூறுவதற்குள், இறந்து விட்டார். விதியின் மீது நம்பிக்கை கொண்டிருந்த நான், தஸ்தாவேஜுகள் பற்றி கவலைப்பட வில்லை. மீண்டும் அமெரிக்கா சென்று மூன்று வருடத்திற்குப் பின் இங்கிலாந்து திரும்பினேன்.

ஒரு நாள் லண்டன் சுற்றுப்புறுத்தில் உள்ள ஒரு ஸ்டேஷனில் ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தபோது, அங்கே கிடந்த ஒரு பத்திரிக்கையின் பக்கம் என் பார்வை செல்லவே, அதை எடுத்து வாசித்துப் பார்த்தேன். ஸ்டேசனுக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில், இறந்த ஆவியின் சம்பாசணை பற்றிய பூஜையும், பஜனையும் நடைபெறவிருக்கும் விளம்பரம் ஒன்று என்னைக் கவர்ந்தது. ரயில் வருவதற்கு இன்னும் மூன்று மணி நேரம் இருந்தது. அந்த இடத்திற்கு சென்று அந்த சபையில் அமர்ந்தேன். ஜோதி வேண்டும் என்ற கருத்துள்ள ஒரு சங்கீதம் பாடப்பட்டது. முடியும் தருவாயில் ஒரு வெண்மையான ஜோதி அந்த அறையின் நடுவே தோன்ற ஆரம்பித்தது. அப்போது என் முகத்திற்கெதிரே ஏதோ ஒரு திரை நிற்பதைப் போன்று தெரிந்தது. மிருதுவான ஒருபொருள் என் முகத்தை தடவியது போலிருந்தது.

அதேநேரம் என் முதுகை தட்டிக் கொடுப்பதைப் போலிருந்தது. மீண்டும் ஒரு சங்கீதம் பாடப்பட்டது. அப்போது எனக்கு முன் ஒரு முகம் தோன்றத் துவங்கிற்று. இறந்து போன என்தந்தை முகம்தான் அது. உருவம் மறைந்து பெருமூச்சு விடும் சப்தம் கேட்டது. என் கன்னத்திற்கு அருகில் ஒரு சப்தம். மகனே! உன்னைக் காணவே வந்திருக்கிறேன். இதுகேட்டு நான் வியப்புற்றேன். முகம் மீண்டும் தெரிந்தது. அவர் உயிதோடு இருக்கும் போது அவர் முகத்திலிருந்த வடு உட்பட தெரிந்தது. தந்தையே! என்னவென்று சொல்ல. வந்திருப்பது நீங்கள்தான் என்பது தெரிகின்றது. எனினும் நம்ப முடியவில்லை. இது எப்படி முடியும்? என்றேன். என் தந்தையின் உருவம், நான் நன்றாக இருப்பதைக் கண்டு சந்தோசமுறுவதாகக் கூறி, இறப்புத் தருவாயில் சொல்ல முயன்ற தஸ்தாவேஜு சம்பந்தமான விசயங்களனைத்தையும் கூறி முடித்தது. சொன்னது முழுவதையும் கேட்டபின், நான் இங்கு வரப்போவதை நீங்கள் எப்படித் தெரிந்து கொண்டீர்கள் என்று கேட்க, என் தந்தை, எனக்குத் தெரியாது. நான் இறந்தபின் மரணத் தருவாயில் நான் சொல்ல விரும்பியதை சொல்ல முடியாமல் போனது குறித்து பிரார்த்தித்தவனாக இருந்தேன். உலகில் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவதைப் போல் அங்கும் அங்கீகாரம் பெறத்தான் செய்கின்றன.

எப்படியோ இங்கு இழுக்கப்பட்டு வந்தேன். எப்படி என்பது எனக்கே தெரியாது. ஆனால் ஒரு சுடர் அச்சுடரின் முடிவில் உன் முகம்தான் தெரிந்தது. அச்சுடரைப் பின்பற்றி வந்தேனென்று நினைக்கிறேன். இதுதான் எனக்குத் தெரியும். தந்தையே! நீங்கள் மீண்டும் பேசினால் நான் நாளை இரவும் இங்கு வரத் தயாராயிருக்கிறேன் என்று சொல்ல, 'இல்லை' என் விருப்பம் நிறைவேறிவிட்டது. திரும்பவும் நான் உன்னிடம் வரக்கூடும். எப்போது என்று எனக்குத் தெரியாது. மரணத்திற்குப் பின் உள்ள உயிர் நிலைக்கு, எனக்கு அகப்படாமலிருந்த ஒரு ஆதாரத்தை இன்று உனக்குத் தந்திருக்கிறேன். அதற்கு முதலில் நன்றி செலுத்து. 'அதிகம் அறிய விரும்பி அனைத்தையும் இழந்தவர்கள் அநேகர் எனக் கூறி மறைந்தார். அதன்பின் என்தந்தை கூறிய இடத்திற்குச் சென்று தஸ்தாவேஜுகளை பெற்றேன்.

இந்திய நாட்டின் மாஜி ராஜப் பிரதிநிதியாயிருந்த லார்டு இர்வின் என்பவரது தந்தை டாக்டர் லார்டு ஹாலிபாக்ஸ் என்பவர் ஆவிகள் சம்பந்தமான அனுபவங்களை கொண்ட நூலில் கூறியுள்ள ஒரு சம்பவம் பின்வருமாறு:-

லார்டு டைரோன் என்ற கோமகனும் லேடி பிரஸ்போர்டு என்னும் சீமாட்டியும் அயர்லாந்தில் பிறந்து வளர்ந்த சகோதர சகோதரியாகும். சிறு வயதில் இவ்விருவரும் இணை பிரியாதிருந்தனர். மத

சம்பந்தமான ஆராய்ச்சிப் பேச்சுக்கள் அவர்கள் வீட்டில் அடிக்கடி நடைபெறுவதுண்டு. இவர்களுக்கும் அதில் ஆர்வம் அதிகமிருந்தது. நம் இருவரில் யார் முதலில் இறந்தாலும், இறந்தவர் வாழ்ந்து கொண்டிருப்பவரிடம் வந்து மரணத்திற்குப் பின் ஏற்படும் அனுபவத்தை வைத்து உண்மையான மதம் எது என்பதை அறிவிக்க வேண்டும் என்று பேசி இருவரும் பிரதிக்ஞை செய்து கொண்டனர். சில ஆண்டுகளுக்குப் பின் பிரஸ்போர்டு சர் மார்க்கஸ் என்பவருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார். அவரது சகோதரர் லார்டு டைரோன் அடிக்கடி சென்று சகோதரியை சந்தித்துப் பேசுவது வழக்கம்.

ஒருநாள்காலையில்சர்மார்க்கஸ்தன்மனைவியின்முகம் வெளுத்திருப்பதையும், அவள்கையில் ஒரு கறுப்புப்பட்டியொன்று கட்டப்பட்டிருப்பதையும் பார்த்து, உன் கையில் எதுவும் காயமா என்று கேட்க, அதைப்பற்றி எதுவும் கேட்க வேண்டாமென்று கெஞ்சவே, சரியென்று விட்டுவிட்டார். இதற்கிடையே தந்தி ஏதாவது வந்திருந்ததா? என்றுஅவர் கேட்க, தகவல் எதையாவது எதிர்பார்க்கிறாயா? என்று வினவ, 'ஆம். என் சகோதரர் லார்டு டைரோன் நேற்று மாலை நான்கு மணிக்கு இறந்து விட்டார் அந்தத் தந்தியைத்தான் எதிர்பார்க்கிறேன்' என்று கூறினார். அவ்வாறே அன்று பொழுது சாயும் முன்பே தந்தியும் வந்து சேர்ந்தது. ஆச்சரியப்பட்டு போன கணவனை நோக்கி, எனக்கு எப்படித் தெரியும் என்பது ஒருபுறமிருக்கட்டும். இன்னொரு விசயம். என் கருவிலிருப்பது ஆண் குழந்தை என்பதை எண்ணி சந்தோஷப்படுங்கள் என்றும்

கூறினாள். சிலநாட்களுக்குப் பின் பிறந்த குழந்தை ஆணாக இருந்தது. சர் மார்க்கஸூம் இறந்து விட்டார் பிரஸ் போர்டுக்கு அப்போது வயது நாற்பத்தெட்டு.

தனது முடிவு தன்னை நெருங்கிவிட்டதாகக் கூறி, தனது மகனை அழைத்து, மகனே! நான் இறக்கும் நேரம் நெருங்கிவிட்டது. உன்னிடம் சொல்ல வேண்டிய இரகசியம் ஒன்றுள்ளது. அது எனக்கும் என் சகோதரர் லார்டு டைரோனுக்குமிடையே ஒரு நெருக்கமான பாசமிருந்தது. ஒரு நாள் நான் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தபோது, சட்டென விழிப்பு ஏற்பட்டது. அப்போது பக்கத்தில் சகோதரன் லார்டு டைரோன் இருப்பது தெரிந்தது. நீ ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தாய்? என்று கேடக், அதற்கு அவன் நமது ஒப்பந்தத்தை மறந்து விட்டாயா? எனக்' கேட்டுவிட்டு, 'நான் நேற்று மாலை நான்கு மணிக்கு இறந்து விட்டேன். உன் முன் ஆஜராவதற்கு இன்று அனுமதி கிடைத்து வந்துள்ளேன். தெய்வத்தால் அருளப்பட்ட மார்க்கம் எதுவோ, அதுவே ரட்சிக்கக் கூடிய மார்க்கம் என்று உனக்கு உறுதி சொல்ல அனுமதி பெற்றுள்ளேன். அத்துடன் உனக்கு பிறக்க இருப்பது ஆண் குழந்தை என்பதையும் தெரிவிக்க எனக்கு அனுமதி கிடைத்துள்ளது' எனக் கூறி வருங்காலம் பற்றிய இன்னும் பல விஷயங்களையும் சொன்னான்.

அப்போது நான்: விடிந்ததும் உன்னை நான் பார்த்ததும், உன்னுடன் பேசியதும் உண்மைதான் என்பதை நான் எப்படி நம்புவது? என்று கேட்க, எனது மரணச் செய்தி உனக்கு வந்து கிடைக்குமல்லவா என்றான். இருக்கால் இது கனவாயிருக்கலாம். கனவில் காண்பது சிலவேளை நிஜமாவது வழக்கமல்லவா! நீ இங்கு உண்மையாகவே இறந்தபின் தான் வந்திருக்கிறாய் என்பதற்கு தக்க ஆதாரம் இல்லாவிட்டால் சந்தேகத்திற்கு இடமளித்துவிடுமல்லவா? என்றேன். அப்போது கட்டிலில் தொங்கிக் கொண்டிருந்த திரைகளையெல்லாம் ஒரு வினாடிக்குள் கட்டில் வளையத்திற்குள் புகுத்தி, இதோ பார்! இது சாதாரண மனிதனால் முடியுமா என்றான். அதற்கு நான் தூக்கத்தில் கனவு கண்டு, கனவில் கிடைக்கும் பலத்தை வைத்து இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம் என்று காலையில் நான் நினைத்துக் கொள்ளலாம் அல்லவா! என்றேன். அதற்கவன்ளூ உன் நோட்புக்கை எடு என் கையெழுத்துதான் உனக்குத் தெரியுமே. இதோபார் என்று எழுதிக் காட்டினான். தூக்கத்தில் எழுதியிருப்பது போல் தோன்றி விழிப்பில் அவ்வாறு இல்லாதிருக்கக் கண்டால், கனவிலேயே எதையோ நான் கண்டு அதை எழுதிவிட்டதாக நான் நினைக்கக் கூடுமல்லவா என்று சொல்ல, உன் மனம் கல்லா என்ன? எளிதில் நம்ப மறுக்கிறாயே. என் கையால் உன்கையை நான் பிடித்துக் காட்டலாம். ஆனால் உன் கைக்கு அதனால் ஹீனம் ஏற்படுமென்று பயப்படுகிறேன் என்றான். சற்று ஹீனம் ஏற்பட்டால் அதனாலென்ன? நீ ரெம்ப தைரியமுள்ளவள்.

உன் கையை நீட்டு என்றான். நீட்டினேன். என் கையை அவன் தொட்டதும், ஜில்லென்று சலவைக் கல்லை; போல் என் கை குளிர்ந்து போய்விட்டது. அந்த இடத்திலுள்ள நரம்பும், சதையும் சற்று சுருங்கி விட்டன. அதன்பின் அவன் என்னை அழைத்து, அக்கையை யாரையும் காணவிடாதே. அங்கு ஏற்பட்டுள்ள அடையாளத்தை எவராவது காண நேர்ந்தால் அது பெருங்குற்றமாகி விடும் என்று எச்சரிக்கை செய்து விட்டு மறைந்து போனான்.

காலையில் எழுந்து மிகுந்த சிரமத்துடன் ஒரு கம்பியைக் கொண்டு திரைகளை நேர்படுத்தி விட்டு கையெழுத்துள்ள நோட்டுப் புக்கைப் பத்திரப்படுத்திக்கொண்டு, என்கையில் ஏற்பட்டிருக்கும் அடையாளத்தை ஒரு கருப்புப் பட்டியைக் கொண்டு மறைத்துக் கொண்டே மற்ற வேலைகளை பார்க்கலானேன். அன்று என் சகோதரன் கூறிய வார்த்தைகளில் நான் நாற்பத்தெட்டாம் வயதில் மரணமாவேன் என்பதும் ஒன்றெனக் கூறி முடித்தாள்.

தன் மகனுக்குச் சில உபதேசங்களை செய்துவிட்டு கட்டிலில் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டு கிடந்தவள் சில மணிநேரத்தில் இறந்து போனாள். சமீப காலத்தில் மரணத்தின் வாசல் வரை சென்று மீண்ட ஒருவரின் அனுபவத்தை பற்றி ஹாரி கிரக்ஸன் என்பவர் கூறுகிறார்:

நான் அதிகம் நோயுற்றிருப்பதை உணர்ந்தேன். என் சரீரத்தில் விஷமேறிப் போய்விட்ட அறிகுறிகள் தோன்றின. இருந்தாற் போல் என் உணர்வு மற்றோர் உணர்விலிருந்துப் பிரிவதை அறிந்தேன். சிறுகச் சிறுக என் திரேகம் படுக்கையில் கிடப்பதையும், பிறகுவீடு, தோட்டத்திலுள்ள சகலவற்றையும்,லண்டன், ஸ்காட்லாந்து ஆகியவற்றில் உள்ளவைகளையும் என்னால் காண முடிவதை உணர்ந்தேன். உண்மையில் என் கவனம் செல்லும் இடத்தை எல்லாம் என்னால் பார்க்க முடிந்தது. நான் காலம் என்ற இடைவெளியில் சுதந்திரமாக இருந்தேன். அங்கே 'இப்போது' என்பது, இங்கே நமது சாதாரண மூன்று பிரிவான தினசரி வாழ்க்கைக்ககுச் சமமாக இருந்தது. சிறுகச்சிறுக நான் ஜனங்களை அறிந்து கொள்ளத் துவங்கினேன். நான் இதை கிரகிக்கத் துவங்கியதும், 'ஏ' என்பவன் எனது பாடுக்கை அறைக்கு வந்து என்னைக் கண்டு பயத்தால் நடுங்கி விட்டான்.

பின்னர் டாக்கடர் வந்து என்னை பரிசோதித்துப் பார்த்து விட்டு, நான் இறந்து விட்டதாகக் கூறினார். நான் எனது திரேகத்துடன் சம்பந்தமற்றிருந்ததால் என்னால் பதிலளிக்க முடியவில்லை. நான் எங்கிருக்கிறேன். எதைப் பார்க்கிறேன் என்பதை உணரப் போகும் சமயம், டாக்டர் என் திரேகத்தில் எதையோ இன்ஜெக்ஷன் செய்தார். சட்டென என் இதயம் துடிக்க ஆரம்பித்தது. என்னை மீண்டும் எனது சரீரத்தில் இழுத்து நுழைய வைத்ததைக் குறித்து உண்மையிலேயே கோபமுற்றேன். என் ஆத்ம உலா நிலைமாறி, முந்திய வலியை உணர்ந்து வருந்தும் நிலைக்கு திரும்பவந்து விட்டேன்.

மனிதன் மரணத்தைக் கண்டு பயப்படாதிருந்தால், அம்மரணத்தை மிகமிக ஆச்சரியப்படத்தக்க அனுபவ ரீதியான ஆய்வுகளில் ஒன்றாகவே பார்ப்பான். இத்தகைய அனுபங்களைப் பெற்ற நல்லடியார்கள் மரணத்தால் ஏற்படும் திருப்தியையும், அதைவிட்டு திரும்பிவர மனமில்லாதிருப்பதையும் ஆராயும்போது, அவர்களுக்கு மரணம் என்பது ஆனந்தமான ஒன்றாகவே தோன்றுகிறது. சரீர நிலையிலிருந்து ஆன்மநிலைக்கு – பர்ஜக்குக்கு மாறினாலும், பார்க்கும் தன்மையும், கேட்கும் சக்தியும் இருக்கின்றது என்பது உறுதியாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட விபரங்களை கூறுவோர் மேலை நாடுகளைச் சேர்ந்த பிரபல ஆய்வாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், டாக்டர்களாகவும் இருப்பதால், இந்திய தேச பகுத்தறிவுவாதிகள் எவ்வித மறுப்பும் கூறுவதில்லை. அவ்வாறின்றி, கீழை நாட்டு மக்களில் எவராவது, அதிலும் ஆங்கிலம் கற்றவராயில்லாமல் கீழ்தேச பாஷை பேசுவராயிருந்தால் இந்நேரம் வானம் இடிந்து அவர்கள் மீது விழுந்திருக்கும். பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருப்பார்கள். ஆனால் இதைக்

கூறுவோர் ஆங்கில தேசத்தவர்களாகவும், அறிஞர்களாகவும் இருப்பதால் இந்திய பகுத்தறிவாளர்களுக்கு அவை வேதவாக்குகளாகத் தோன்றுகின்றன போலும்.

நபிமார், வலிமார் ஜீவனுள்ளவர்களே நபிமார்கள், வலிமார்கள், ஷுஹதாக்கள், சாலிஹீன்கள் போன்றோர் மரணத்தை அனுபவித்த போதும் அவர்கள் ஜீவனுள்ளவர்களே என்று இறைவனும் நபிகள் நாதரும் நவில்கின்றனர்.

وَلَا تَقُولُوا لِمَن يُقْتَلُ فِي سَبِيلِ اللَّهِ أَمْوَاتٌ ۚ بَلْ أَحْيَاءٌ وَلَٰكِن لَّا تَشْعُرُونَ

'இன்னும் அல்லாஹ்வுடைய பாதையில் வெட்டப்பட்டவர்களை இறந்தவர்களென்று சொல்லாதீர்கள். எனினும் (அவர்கள்) ஜீவனுள்ளவர்களாகவே இருக்கின்றனர். இன்னும் நீங்கள் (அதை) உணர மாட்டீர்கள்' –அல்குர்ஆன்2:154

لَّذِينَ قَالُوا لِإِخْوَانِهِمْ وَقَعَدُوا لَوْ أَطَاعُونَا مَا قُتِلُوا ۗ قُلْ فَادْرَءُوا عَنْ أَنفُسِكُمُ الْمَوْتَ إِن كُنتُمْ صَادِقِينَ

وَلَا تَحْسَبَنَّ الَّذِينَ قُتِلُوا فِي سَبِيلِ اللَّهِ أَمْوَاتًا ۚ بَلْ أَحْيَاءٌ عِندَ رَبِّهِمْ يُرْزَقُونَ

'இன்னும் அல்லாஹ்வின் பாதையில் வெட்டப்பட்டவர்களை இறந்தவர்கள் என்று எண்ணாதீர்கள். எனினும் அவர்கள் ஜீவனுள்ளவர்களாகவே உள்ளனர். தங்கள் ரப்பிடத்தில் அவர்கள் உணவளிக்கப்படுகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு தனது கிருபையால் அளித்ததைக் கொண்டு சந்தோஷமடைந்தவர்களாக இருக்கின்றனர்' – அல்குர்ஆன், 3:168,169

ஷஹீத் என்னும் பெயர் அல்லாஹ்வுக்குரிய திருநாமங்களில் ஒன்று. 'ஷஹீத்' என்னும் நாமத்திற்கு 'உதயமாயிருந்து பார்ப்பவன்' என்றும், சாட்சியாயிருப்பவன் என்றும் பொருள்படும். அல்லாஹ் அனைத்து வஸ்துக்கள் மீதும் உதயமாகி அறிபவனாகவும், மறுமைநாளில் அடியார்களது அனைத்து செயல்களையும் அறிந்த சாட்சியாகவும் இருக்கிறான். இத்தகைய சர்வ வல்லுமையுள்ள அவனது ஷஹீத் என்னும் திருநாமம் தம்முயிரை அர்ப்பணித்த ஷுஹதாக்களுக்கு ஏற்பட்டதன் அகமியமானது, அவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து அல்லாஹ்வுடைய பாதையில் அவனுக்காகவே தத்தம் செய்து தியாகம் செய்ததால், அவனது ஷஹீத் என்ற பெயரின் குணங்கள் அவர்களிடம் வெளியாகி அவனது சக்தியைக் கொண்டு பார்ப்பவர்களாகவும், சாட்சிகளாகவும் இருக்கின்றனர். பின்னும் இறைவன் அளிக்கும் உணவை ஏற்று ஆனந்தமாகவும் இருக்கின்றனர். இறைவனது பாதையில் உயிர் நீத்து ரத்தசாட்சி சொல்லப்பட்ட மஷ்ஹூத் ஆகவும் இருக்கின்றனர். இக்குணங்கள் உயிரோடிருப்பவர்களுக்கு உரியதால் அவர்களை 'ஜீவனுள்ளவர்கள்' என்று இறைவன் சொல்வதாக அந்தரங்கத்தை உடைய உலமாக்கள் கூறுகின்றனர். ஆதலால் பார்த்து சாட்சியாயிருக்கும் அவர்களுக்கு கேட்கவும் செய்யும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

اَلَا اِنَّ اَوْلِيَاءَ اللّٰهِ لَا يَمُوْتُوْنَ بَلْ يَنْتَقِلُوْنَ مِنْ دَارٍ اِلٰى دَارٍ

'நிச்சயமாக அல்லாஹ்வுடைய ஔலியாக்கள் மரிப்பதில்லை. ஆனால் ஒரு இல்லத்திலிருந்து மறு இல்லத்திற்கு மாறுகின்றனர்' -ஹதீது

இந்த ஹதீஸெ குத்ஸியை இமாம் கஜ்ஜாலி ரஹிமஹுல்லாஹ் அவர்ள் அர்பயீன் என்னும் நூலில் குறிப்பிடுகின்றனர். இறப்பு என்பது அழிவுக்குரியதல்ல. சில படித்தரங்களைக் கொண்டு ஜடத்துவ

மாற்றமாகும். ஒரு நிலையிலிருந்து வேறோர் நிலைக்கு முன்னேறிச் செல்வதாகும். மரணத்திலிருந்து புதிய ஓர் வாழ்க்கை உதயமாகி அது என்றென்றும் நித்தியமாய் நின்று நிலவத் துவங்குகிறது. ஏனெனில் ஆத்மா அழிந்து போவதல்ல. இத்தகையோர் உயிர் நீத்து மண்ணோடு மண்ணாகி விடுவதில்லை. சரீரமும் அழிந்து போவதில்லை. ஜீவியத்தில் இருந்தது போன்றே கப்ர்(பர்ஜக்)களிலும் அப்படியே சரீரம் கோர்வை குலையாது இருப்பர்.

إِنَّ اللهَ حَرَّمَ عَلَى الْأَرْضِ أَنْ يَأْكُلَ أَجْسَادَ الْأَنْبِيَاءَ

'நபிமார்களது திரேகங்களை திண்பதை இறைவன் பூமிக்கு திடனாக ஹராமாக்கிவிட்டான். - ஹதீது

என்று கூறும் நபிகளாரின் ஹதீது அபூதாவூத், பைஹகி போன்ற கிரந்தங்களில் மன்னிக் கொண்டிருக்கின்றது. நபிகளின் திரேகத்தை மண் தின்னாததைப் போல் வலிமார்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களின் திரேகத்தையும் மண் தின்னாது.

அவர்களின் தேகமும் அழியாது. இதைப்பற்றி, அர்பயீன் ஷரஹுல் ஸுதூர் ஃபீ ஷரஹில் மவ்த்தா வல் குபூர், ஷரஹு பர்ஜக் போன்ற நூல்களில் இமாம் கஜ்ஜாலி, இமாம் சுயூத்தி, இமாம் அபூ சயீத் சல்மீ ரஹிமஹுல்லாஹ் போன்றோர் விளக்கமாகக் கூறுகின்றனர். எனவே அவர்கள் இம்மண்ணுலகை விட்டு மறைந்த பின்பும் ஜீவியத்துடன் எவ்வாறு இருந்தார்களோ, அவ்வாறே கப்ரி(பர்ஜகி)லும் இறுதிநாள் வரை ஹயாத்தாகவே இருப்பார்கள். பின்வரும் ஆதாரங்களை கண்டு நன்கு சிந்தியுங்கள்.

கௌதுல் அஃலம் சைய்யிதினா முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருமுறை செய்யிதுல் அன்பியா முஹம்மது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித ரௌலா ஷரீபை அணுகி கீழ்கண்ட இரு பைத்துக்களை கூறினர். அது…

ஃபீ ஹாலத்தில் புஃதி ரூஹி குன்த்து உர்ஸிலுஹா

துகப்பிலுல் அர்ள அன்னீ வஹிய நாயிபத்தீ.

'நான் தொலைவிலிருக்கும் போது என்னிலிருந்து பிரதிநிதியாகத் தங்களின் கப்ரை முத்தமிடுவதற்கு என் ரூஹை அனுப்பிக் கொண்டிருந்தேன்'

வ ஹாதிஹி நவ்பத்துல் அஷ்பாஹி கத் ஹழரத்

ஃபம்துத் யமீனிக கை துஹ்ழா பிஷா ஷபத்தீ

'அந்த ரூஹானது இப்போது உடலோடு தங்களின் சமூகத்தின் முன்வந்து நிற்கிறது. என் உதடுகள் முத்தமிட்டுப் பலன் பெறத் தங்களின் வலக்கரத்தை நீட்டுங்கள்'

இவ்விரு கவிதைகளையும் ஓதி முடிக்குமுன் பொற்குன்றிலிருந்து குளிர்ந்த பூரணச் சந்திரன் ஒன்று வெளிப்பட்டதைப் போன்று, 'நபிகள் நாதரின் வலக்கரம் கப்ருக்குள்ளிருந்து வெளியில் நீண்டது.' கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அக்கணமே அக்கரத்தை பற்றி ஆசைதீர முத்தி முகர்ந்து தலைமீது வைத்துக் கொண்டனர். இந்த அற்புதமான வரலாற்றை தப்ரீஜுல் காத்திர் என்னும் நூலில் காணுக.

சுல்தானுல் ஆரிபீன் செய்யித் அஹ்மத் கபீர் ரிபாயீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவுக்கு சென்றபோது, மேற்கண்ட அவ்விரு பைத்துக்களையும் கூறிட, அப்போதும் நபிகளாரின் வலக்கரம்

வெளிப்பட்டதெனக் கூறும் சம்பவத்தை ஷவாஹிதுல் ஹக், மஷாரிகுல் அன்வார் போன்ற நூல்கள் நமக்குக் கூறுகின்றன.

சிரியாவிலுள்ள ஹலப் என்னும் ஊரில் அப்துர் ரஹ்மான் ரஹிமஹுல்லாஹ் என்னும் பெயருள்ள வலியுல்லாஹ்வின் தர்கா ஒன்றுண்டு. அப்பகுதியில் முன்பு முரட்டு சுபாவமுடைய குர்தியர் என்னும் வகுப்பைச் சார்ந்தவர்கள் இருந்து வந்தனர். அந்த குர்து வம்சத்தாருக்கும், அராபிய துரக்கி வம்சத்தாருக்குமிடையே கலப்பு மணம் ஏற்பட்டு அதில் பிறந்தோரை 'அக்றாத்' வம்சத்தினர் என்று அழைக்கப்படுகின்றது. அவர்களை அரபிகள் மிகவும் தாழ்வாக மதித்து வந்தனர். அந்த அக்றாத் வம்சத்தை சேர்ந்தவர்கள் தான் அப்துர் ரஹ்மான் ரஹிமஹுல்லாஹ் என்னும் இறைநேசர்.

ஒருமுறை ஹலபுக்குச் சென்ற ஒரு அரபி ஜியாரத்துக்கு அந்த தர்காவுக்குச் சென்றார். அவ்விறைநேசர் பற்றி அவர் விசாரித்தபோது அக்றாத் வம்சத்தை சார்ந்த வலி என்று சொல்லப்பட்டது. குலப்பெருமை கொண்ட அந்த அரபி அக்றாத் வம்சத்திலுமா வலியுண்டு? என ஏளனமாகக் கூறினார். அவரின் குலப்பெருமையின் மமதை அவரை விட்டு அகற்றும் பொருட்டு அப்போதே அந்த இறைநேசரின் கப்ருக்குள்ளிருந்து ஒரு கால் வெளிப்பட்டது. இன்று வரை முழங்கால் வரை வெளியே நீட்டியவாறே அது இருந்த கொண்டுள்ளது. இதை பலபேர் தரிசித்துமிருக்கின்றனர். மரணத்திற்குப் பின் ஜீவியமில்லையென மறுப்போர் இன்றும் ஹலபுக்குச் சென்று பார்க்கலாம்.

**தேகம் அழியா மகான்கள்**

ஹயாத்துன் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆறாவது நூற்றாண்டில் ஷாம் தேசத்தை ஆண்டு வந்த சுல்தான் நூருத்தீன் மஹ்மூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இரு நபர்களின் குறும்புத்தனத்தை எச்சரிக்கை செய்த சம்பவம் பற்றி, குலாசத்துல் வபா ஃபீ அக்பார் தாருல் முஸ்தபா என்னும் மதீனாவின் சரித்திர நூல் கூறுவதைப் பாருங்கள்.

ஹிஜ்ரி 557ல் ஒரு இரவு சுல்தான் நூருத்தீனு; மஹ்மூதின் கனவில் மூன்று முறை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோன்றி இரு நபர்களைக் காட்டி, மஹ்மூதே! இவ்விருவரையும் அப்புறப்படுத்தும் என்று கூறினர்.

விடிந்ததும் ஆயிரம் குதிரை வீரர்களுடனும் பொக்கிஷத்துடனும் சுல்தான் மதீனாவுக்குப் புறப்பட்டுவந்து சேர, சுல்தானின் வருகையை ஒட்டி மதீனாவிலுள்ள அனைவருக்கும் சுல்தானே வெகுமதி தரவிருப்பதால் அனைவரும் வந்து வாங்கிச் செல்லுமாறு விளம்பரப்படுத்தப்பட்டது. அவ்வாறே அனைவரும் வந்து வெகுமதி பெற்றுச் சென்றனர். ஆனால் கனவில் காட்டப்பட்ட அவ்விருவர் மட்டும் காணப்படவில்லை. நபிகளாரின் அறிவிப்பு ஒரு போதும் உண்மையில்லாது போகாதேயென சுல்தான் கவலைப்பட்டார். அப்போது சுல்தான் அங்கிருந்தோரை நோக்கி, எல்லோரும் வந்துவிட்டார்களா? மதீனாவில் வேறு யாருமில்லையா? என்று கேட்க, ஸ்பெயின் தேச ஆபித்கள் இருவர் மட்டும் இருக்கின்றனர். மனிதத் தொடர்பற்ற நிலையில் நபிகளாரின் ரவ்லாவுக்குப் பக்கத்திலுள்ள குடிலில் இருந்து வருகின்றரெனக் கூறப்பட்டது.

அவ்விருவரும் அழைக்கப்பட, கனவில் காட்டப்பட்டவர்கள் தான் அவ்விருவரும் என்பதை தெரிந்து சுல்தான் நலம் வினவ, தாங்கள் ஸ்பெயினைச் சேர்ந்த முஸ்லிம்களென்றும், நபிகளாரின் ஜியாரத்தை நாடி ரவ்லாவிற்குப் பக்கத்திலேயே இருந்து, இறைவணக்கத்தில் ஈடுபட்டிருப்பதாய் தெரிவித்தனர். உண்மையைக் கூறுமாறு அதட்டவும், பயந்துபோன அவர்கள், நாங்கள் கிறித்துவர்கள்ளூ நபிகளாரின் புனித திரேகத்தைத் திருடி வருமாறு கிறித்துவ அரசை சேர்ந்தவர்கள் எங்களை நியமித்தனர். அதற்காகத்தான் நாங்கள் இங்கே வந்தோம் எனக் கூறவும், அவர்கள் தங்கியிருந்த குடிலுக்குச் சென்று சோதனையிட ரவ்லாவரை ஒரு சுரங்கம் தோண்டப்பட்டிருந்தது. உடனே அவ்விருவரையும் சுல்தான் தமது வாளினால் வெட்டிக் கொன்றார்.

தலாயிலுல் கைராத் என்னும் உலகப் புகழ் வாய்ந்த சலவாத்துடைய நூலை இயற்றிய ஹழ்ரத் ஷைகு முஹம்மத் இப்னு சுலைமான் ஜஸூலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 870ம் ஆண்டு சூயஸ் எனும் நகரில் அடக்கப்பட்டு 77 வருடங்களுக்குப்பின் ஹிஜ்ரி 947ல் அவர்களின் கப்ரு தோண்டப்பட்ட போது அப்படியே அழியாமலிருந்த அந்த திரேகத்தை எடுத்துக் கொண்டு போய் மொராக்கோவில் அடக்கப்பட்டுள்ளனர். இதுபற்றிய முழு விபரத்தையும் ஜாமிஃ கராமத்துல் அவ்லியா என்னும் நூல் பாகம் 1, பக்கம் 165ல் பார்க்கலாம்.

நபிகள் நாதரின் தோழர்களாகிய ஹழ்ரத் ஹுதைபத்துல் யமனீ, ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹுமா இருவரும் ஷஹீதாகி, பக்தாதுக்கு பக்கத்தில் ஒரு ஆற்றோரமாக அடக்கப்பட்டிருந்தனர். பின்னர் ஆற்றில் அவ்விரு கப்ருகளும் மூழ்கிவிடுமென்ற நிலையைக் கவனத்தில் கொண்டு 1300 ஆண்டுகளுக்குப் பின் கி.பி.1932ம் வருடம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அவ்விரு கப்ருகளும் தோண்டப்பட்டு அப்படியே குலயாதிருந்த அவ்விரு உடல்களும் நபித்தோழர் ஹழ்ரத் சல்மான் பார்ஸி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ருக்கு பக்கத்தில் அடக்கப்பட்டன. இதனை அவ்வருடத்திய சென்னை தமிழ் பத்திரிக்கை ஸைபுல் இஸ்லாம் மற்றும் உர்தூ அக்பார்களும் வெளியிட்டுள்ளன.

இவை மட்டுமல்ல. இத்தகைய பதவியை அடைந்தோர் அநேகமுண்டு. 'ஏக ரப்பில் ஆலமீனருட் காளான வேழைபங்காளர் கோடி'....'தேகமழியாத நற்பாகம் படைத்தமா சித்தர்களனந்த கோடி' எனக் குணங்குடி மஸ்தான் சாகிப் ஆலிம் காமில் ரஹிமஹுல்லாஹ் அவர்களும் எடுத்துக் காட்டுகின்றனர். இதுபோன்றே எண்ணற்ற நிகழ்ச்சிகள் பல சரித்திர ஏடகளில் ஆதாரமாய் காணக்கிடக்க, கப்ருகளில் இருப்போரைப் பற்றி நம்பிக்கை இழந்தோரைக் குறித்து...

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَتَوَلَّوْا قَوْمًا غَضِبَ اللهُ عَلَيْهِمْ قَدْ يَئِسُوا مِنَ الْآخِرَةِ كَمَا يَئِسَ الْكُفَّارُ مِنْ أَصْحَابِ الْقُبُورِ

'விசுவாசிகளே! எவர்கள் மீது அல்லாஹ் கோபப்பட்டானோ அவர்களை நீங்கள் நேசிக்காதீர்கள். சமாதிகளில் இருப்போர் பற்றி நிராகதிப்போர் நம்பிக்கை இழந்தவாறே மறுமையைப் பற்றி திடனா இவர்களும் நம்பிக்கை இழந்து விட்டனர்' –அல்குர்ஆன் 60-13

என இறைவனே கூறுகின்றான். இதர காரணங்களால் மரணத்திற்குப் பின்னரும் நபிமார்கள், வலிமார்கள் அழியா திரேகத்தையுடையவர்கள், வணக்க வழிபாடுகள் செய்யும் சக்தியுடையவர்கள் எனத் தெரிய வருகின்றது.

**பிரபஞ்சப் பாதுகாவலர்கள்**

أَلَمْ نَجْعَلِ الْأَرْضَ مِهَادًا وَالْجِبَالَ أَوْتَادًا

'பூமியை நாம் விரிப்பாக அமைத்து, (அதில்) முளைகளாக்கவில்லையா?' என்று இறைவன் கூறுகின்றான். -அல்குர்ஆன் 75-6,7

இவ்வசனத்தில் மலை, முளை என்பதன் கருத்து 'வலிமார்கள்' தான் என்பதை தப்ஸீர் ரூஹுல் பயான், பாகம் 10 பக்கம் 293ல் பார்க்க. வலிமார்களுக்கு அதிபதியான குத்பு என்ற பெயருக்கு முளை என்றும் அச்சாணி என்றும் சொல்லப்படும். குத்புக்கு கௌது என்று மற்றோர் பெயருமுண்டு. கௌது என்னும் பதத்திற்கு பல அர்த்தங்கள் இருப்பினும், குறிப்பாக இரட்சகர் என்று சொல்லலாம். இவர்கள் தான் அந்தரங்கத்தில் பிரபஞ்சப் பாதுகாவலர்களாக இருக்கின்றனர்.

இன்னும் குத்பு, கௌது போன்றோரே.... உலக மாந்தர், மற்றும் உலகத்துடைய காரியகர்த்தர்களாகவும், உலகை நிலைபெறச் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் பொருட்டே உலகம் நிலைபெற்றுள்ளது. அவர்கள் சிருஷ்டிகளை ஆள்பவர்களாகவும், மெய்ப்பொருளின் பிரதிநிதியாகவும் இருத்தல் வெளித்தோற்றத்தில் அல்ல. அந்தரங்கத்திலாம் என்று கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது பத்ஹுர் ரப்பானி என்னும் நூலில் கூறுகின்றனர்.

'எனது உம்மத்தில்' நாற்பது பேர் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இதயமுடையவர்களாக இருப்பர். அவர்களைக் கொண்டே பூமியில் வாழ்பவர்களது பிணிகளை அல்லாஹ் நீக்குவான். இன்னும் அவர்களைக் கொண்டே மழையை பொழியச் செய்வான். மேலும் அவர்களைக் கொண்டுதான் உதவியும் செய்யப்படும் என்று அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதாக தப்ரானீ என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

'ஒரு சாலிஹான மனிதர் இருக்கும் ஊரில் அவருக்கு அக்கம்பக்கத்திலுள்ள நூற்றுக்கணக்கான வீடுகள் பால் இறைவன் தன் கோபத்தைக் கொண்டு இறக்கும் பலாய் முஸீபதுகளை அந்த சாலிஹான மனிதரை முன்னிட்டு தடுத்து விடுவான் என்ற ஹதீது சொல்லப்பட்டபோது, அல்லாஹ் மனிதர்களில் சிலரை சிலரைக் கொண்டு தடுக்கவில்லையாயின் பூமி குழப்பமாகிவிடும். ஆயினும் நிச்சயமாக அல்லாஹ் உலகோர் மீது கிருபையுள்ளவனாக இருக்கிறான்!' மலைகளை என்று இறைவன் குர்ஆன் 2:51ல் கூறியிருப்பதாக ஹழ்ரத் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மேற்கோள் காட்டினார்கள் என தப்ஸீர் பைஜுல் கரீம் கூறுகிறது.

'அந்தரங்க ஆபத்துக்களில் நின்றும் குத்புகளைக் கொண்டே இறைவன் இப்பிரபஞ்சத்தைப் பாதுகாத்துக் கொள்கிறான்' என தப்ஸீர் ரூஹுல் பயான், பாகம் 9, பக்கம் 102ல் கூறப்பட்டுள்ளது.

'எந்த மனிதர் உயிரோடிருக்கையில் அவரைக் கொண்டு பலன் பெறுவோமோ, அவ்வாறே அவரது கப்ரை ஜியாரத்துச் செய்வது கொண்டு பலன் பெறுவதும் கூடும்' என இமாம் கஜ்ஜாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இஹ்யா உலூமுத்தீன் என்னும் நூலில் குறிப்பிடுகின்றனர்.

எனவே உலகில் ஏககாலத்தில் பல எண்ணிக்கை கொண்ட பல்வேறு வகையான தரஜாக்களை உடைய வலிமார்கள் யுக முடிவு நாள்வரை இருந்தே வருவர் என்றும், அவர்களே இரு உலகையும் கண்காணித்து வருவதாயும், இன்னும் பல ஹதீதுகள் காணப்படுகின்றன.

### இறப்புக்குப் பின்னும் கராமத்

வலி என்னும் பெயர் அல்லாஹ்வுக்குரிய பெயர்களில் ஒன்றாகும். வலி என்பதை பிரதிநிதி என்று சொல்லலாம். எனவே வலியுல்லாஹ் என்பதற்கு அல்லாஹ்வின் பிரதிநிதி எனப்படும். வலியுல்லாஹ்க்கள் சர்வ சக்தனாகிய அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து பற்பல அற்புதங்களுடைய காரணங்களை நிகழ்த்தி வருகின்றனர். இயற்கைக்கு மாற்றமான மனித அறிவுக்கு எட்டாத மனிதர்கள் திகைக்கும் வண்ணம் இறநேசர்களால் நிகழும் புதமையான செயல்களுக்கு கராமத் எனக் கூறப்படுகிறது.

முந்தைய காலத்தில் கராமத் குறைவாகவே இருந்ததாகவும், பிற்காலத்தில் தான் அதிகமாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது. இதற்குக் காரணம், அக்காலத்தில் இருந்தோர் மார்க்க ஞானமுடையவர்களாகவும், பேணுதல் உடையவர்களாகவும் சரியான மார்க்க நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்ததால் கராமத்துக்களின் அவசியம் தேவையற்றதாக இருந்தது. ஆனால் இக்காலம் அதற்கு நேர் மாற்றம். மார்க்க அறிஞர்களும் மிகச் சொற்பமே. பேணுதல் என்பதும் இல்லை. மார்க்கத்தின் மீதுள்ள நம்பிக்கையும் மிகவும் குறைவு. இது போன்ற காரணங்களால் நல்லோர்களின் இஃதிதாத் எனும் நம்பிக்கையை பலப்படுத்துவதற்கு கராமத் இன்றியமையாததாக ஒன்றானதால் அதிகமாயிற்று எனக் கூறப்படுகிறது. எனவே வலிமார்கள்

ஜீவியத்திலும், மரணத்திற்குப் பின்பும் அற்புதங்களை செய்ய சக்தியுடையவர்கள்.அவர்கள் இறந்து போவதால் கராமத்துகள் நின்று விடுவதில்லை. மாறாக கீழ்காணும் சரித்திரங்களும் இதை உறுதிப்படுத்துகின்றன.

ஒருவன் ஹழ்ரத் செய்யிதினா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை கேவலமாகப் பேசி பழிப்பதையே வழக்காக்கிக் கொண்டிருந்தான். அவன் ஒருநாள் உறங்கிக் கொண்டிருக்கும்போது, அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவன் கனவில் தோன்றி அவன் முகத்தில் ஓங்கி அறைந்தனர். அவன் பயந்து போய் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தபோது, தனது சூரத்(உருவம்) மாற்றப்பட்டு இருப்பதைக் கண்டான். –நூல்:அர்ரூஹ்.

ஒருவர் மாவு வாங்குவதற்காக மதீனாவிலுள்ள ஒரு கடைக்குச் சென்றார். அக்கடைக்காரன் வலிமார்களை நிராகரித்துப் பழித்துப் பேசுபவன். ஷெய்குமார்களை சபித்தால் பணமில்லாமல் மாவு கொடுப்பதாகக் கூறினான். அவர் மறுக்கவே, கடைக்காரன் கிண்டலாக நகைத்தவாறே அவரை கேலி செய்தான்.

அவர் பலமுறை சொல்ல மறுத்தும் கடைக்காரர் விடுவதாயில்லை. முடிவில் அவர் கோபம் கொண்டு சபிக்குமாறு கூறுகிறவன் மீது சாபம் உண்டாகட்டும் எனக் கூறு, கடைக்காரன் ஆவேசம் கொண்டு அவரை அடித்து முகத்தில் குத்தவும் அவர் தம் கண்களை இழந்தார். இதன்பின் அவர் நேராக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித ரவ்லாவுக்கு சென்று, யாரஸூலல்லாஹ்! தகாத வார்த்தைகளைக் கூற மறுத்ததற்காக நான் என் கண்களை இழந்தேன் என அவர் முறையீடு செய்து விட்டு தமது இல்லத்திற்குத் திரும்பினார். அன்றிரவு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்மனிதரது கனவில் தோன்றி அவரது முகத்தைத் தடவி சென்றனர். விடிந்தபோது தமது கண்கள் எப்போதும் போல் இருப்பதைக் கண்டார். இதைக் கண்ட அக்கடைக்காரன் வலிமார்களை நிராகரிப்பதை விட்டும் தவ்பா செய்தான். –நூல்: அல்கபாயிர் பிஸ் சுன்னத்தி வல் பித்அத்தி.

ஹழ்ரத் அபூபக்கர், ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகியோர் அடக்கமாகி இருக்கும் அறையின் வாசல் பக்கமாக ஒருவர் சென்று தமது தேவையை முன்னிட்டு வஸீலா தேடினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றொருவர், இங்கேயே இருங்கள். இதோ வருகிறேன் எனக் கூறி விட்டுச் சென்றார். சிறிது நேரத்திற்குப் பின் இன்னொருவர் வந்து அவரது கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு போனார். எதையோ தருவதற்காகத்தான் அழைத்துச் செல்கிறார் என்று எண்ணியவராக அவருடன் சென்றார். ஒரு வீட்டிற்குள் அவர் அழைத்துச் செல்லப்பட்டதும் வாயில் கதவு அடைக்கப்பட்டு அம்மனிதர் அங்கே அடித்து நொறுக்கப்பட்டார். அத்துடன் அவரது நாக்கும் துண்டிக்கப்பட்டு வெளியே துரத்தப்பட்டார்.

நாவு துண்டிக்கப்பட்ட மனிதர் அவர் நேராக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித ரவ்லாவிற்கு வந்து, யா ரஸூலல்லாஹ்! தங்களின் இருதோழர்கள் மீதுள்ள நேசத்தால் எனது நாக்கை இழந்தேன் என்று அழுது புலம்பி முறையிட்டபின், தமது இல்லம் திரும்பினார். அன்றிரவு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரது கனவில் அறுபட்ட அந்நாக்குத் துண்டுடன் தோன்றி அவரது நாக்குடன் இணைத்துச் சென்றதைப் போல் கனவு கண்டார். பொழுது விடிந்தபோது துண்டிக்கப்பட்ட நாக்கு முன்போல் இருப்பதைக் கண்டார். நாக்கை அறுத்தவரின் உருவம் குரங்கின் கோலமாக மாறிப் போனது. –நூல்: அல் கபாயிர் பிஸ்ஸுன்னத்தி வல் பித்அத்தி.

வஹாபிக் கொள்கையின் மூலகுருவான இப்னு தைமிய்யாவின் பிரதான சீடர்களில் ஒருவர்தான் இப்னு கையூம் என்பவர். அவர் எழுதிய நூல்கள் தான் அர்ரூஹ், அல் கபாயிர் பிஸ் சுன்னத்தி வல் பித்அத்தி என்பவைகள். வலிமார்களை மறுப்போர் இப்னு தைமிய்யாவையும் அவரைச் சார்ந்தவர்களையுமே உண்மையாளர்களாகக் கருதி அவர்களால் எழுதப்பட்ட நூல்களையே

மேற்கோள் காட்டுவர். ஹழ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மறுத்தவன் பட்டபாட்டையும், கண்களை இழந்தவர் கண்களை பெற்றதையும், நாவு துண்டிக்கப்பட்டவர் மீண்டும் திரும்பப் பெற்றதையும் இப்னு தைமிய்யா என்பவரே மேற்கண்ட தமது நூல்களில் குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலம் இறப்புக்குப் பின்னரும் நபிகளார் முஃஜிஸாக்களையும், இறைநேசர்கள் கராமத்துக்களையும் நிகழ்த்திடும் ஆற்றல் உடையவர்கள் என்பது ஊர்ஜிதமாகிறது.

அண்ட கோடிகளுமோரணுவைத் துளைத்ததி லடக்க வல்லவர்கள் கோடி என்றும், அகிலாண்ட கோடிகளனைத்தும் கணத்தில் விளையாடி வருவார்கள் கோடி என்றும் குணங்குடி மஸ்தான் சாஹிப் ரஹிமஹுல்லாஹ்வும் கூறுகின்றனர். எனவே நபிமார்கள், வலிமார்கள் இவ்வுலகில் இருக்கையில் எவ்வாறு அற்புதங்களை நிகழ்த்தி வந்தனரோ, அவ்வாறே இவ்வுலக மறைவுக்குப் பின்னரும் நிகழ்த்த வல்லவர்கள். அவை மாறாது. மறுமைநாள் வரை அவர்கள் மூலம் அற்புதங்கள் நடைபெற்று வரும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

**கனவும் முன்னறிக்கையும்**

சாலிஹான ஒருவரது பிறப்பைப் பற்றி இறைவனது அருள்பெற்ற பெரியோர்கள் பலர் அவர்களின் பெற்றோருக்கு ஹழ்ரத் கிழ்ரு அலைஹிஸ்ஸலாமவர்கள் கனவிலும், அமரர்கள் அசரீரியாகவும் முன்னறிவிப்புச் செய்துள்ள சம்பவங்கள் சரித்திரங்களில் எண்ணிறந்து காணப்படுகின்றன. கருவிலும், குழந்தைப் பருவத்திலும் சிலர் புரிந்துள்ள அற்புதங்கள் அநேகமுண்டு. மார்க்கம் தெரியாத சிலரே இதை மறுத்து மனிதன் இவ்வுலகில் முயற்சியுடன் நேர்வழியில் நடந்து வலித்தன்மையை பெற வேண்டியதிருக்க, கரு உருவாகுமுன்னரே இறைவனின் பூரண அன்பை அது எவ்வாறு பெற்றிருக்க முடியும்? என்றும், எந்த நபிக்கும் கருவிலிருப்பது இதுதான் என்றோ, அதன் மகத்துவம் பற்றியோ அறிவிக்கப்படவில்லையே! என்றும், பல்வேறு விதமாக கேலி செய்து விஷமத்தனமான பிரச்சாரமும் செய்து வருகின்றனர். நபிமார்கள், நல்லோர்கள் போன்றோரது கனவுகள் ஒருக்காலும் பொய்யாவதில்லை. மலக்குகள் அவர்களின் பிறப்பைப் பற்றி சுபச் செய்தியும் அறிவிப்பதுண்டு.

இதுபற்றி திருமறையிலும், நபிகளாரின் வாக்கிலும், எண்ணற்ற ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மைந்தர் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை தமது கரத்தாலேயே அறுத்துப் பலியிடுவதாகக் கண்ட கனவை பற்றி தமது மைந்தரிடம்...

فَلَمَّا بَلَغَ مَعَهُ السَّعْيَ قَالَ يَا بُنَيَّ إِنِّي أَرَىٰ فِي الْمَنَامِ أَنِّي أَذْبَحُكَ فَانظُرْ مَاذَا تَرَىٰ ۚ قَالَ يَا أَبَتِ افْعَلْ مَا تُؤْمَرُ ۖ سَتَجِدُنِي إِن شَاءَ اللَّهُ

مِنَ الصَّابِرِينَ. فَلَمَّا أَسْلَمَا وَتَلَّهُ لِلْجَبِينِ. إِنَّهُمَا مِنْ عِبَادِنَا الْمُؤْمِنِينَ. قَدْ صَدَّقْتَ الرُّؤْيَا ۚ إِنَّا كَذَٰلِكَ نَجْزِي الْمُحْسِنِينَ

எனது மைந்தனே! உண்மையில் நான் உன்னை அறுத்துப் பலியிடுவதாக மெய்யாகவே எனது கனவில் கண்டேன். எனக் கூறி, மைந்தரை அறுக்க முற்பட்டபோது, இறைவன் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம், உண்மையில் நீர் உமது கனவை மெய்யாக்கி வைத்தீர்! எனக் கூறினோம் என்பதை திருக்குர்ஆன் 37:102-105ல் காணலாம்.

மக்கமாக நகர் வெற்றியைக் குறித்து, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முதலில் கனவின் மூலம் தான் மக்காவிற்குள் நுழையுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பின்னர் அதை உறுதிப்படுத்த,

لَقَدْ صَدَقَ اللّٰهُ رَسُوْلَهُ الرُّؤْيَا بِالْحَقِّ

அவர் கண்ட கனவை மெய்யாகவே உண்மையாக்கி வைத்து விட்டான் என்னும் திருக்குர்ஆன் வசனம் 48:27 வஹியின் மூலம் அறிவிக்கப்பட்டது.

ஈஸாஅலைஹிஸ்ஸலாம்அவர்களின்பிறப்பைப் மகிமையைப் பற்றியும் மர்யம் அலைஹிஸ்ஸலாம் வானவர்கள்,... பற்றியும் அவர்களின் அவர்களைநோக்கி

اِذْ قَالَتِ الْمَلَائِكَةُ يَا مَرْيَمُ اِنَّ اللّٰهَ يُبَشِّرُكِ بِكَلِمَةٍ مِّنْهُ اسْمُهُ الْمَسِيحُ عِيسَى ابْنُ مَرْيَمَ وَجِيهًا فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَمِنَ الْمُقَرَّبِينَ وَيُكَلِّمُ

النَّاسَ فِي الْمَهْدِ وَكَهْلًا وَمِنَ الصَّالِحِينَ

'மர்யமே! திடனாக அல்லாஹ் தனது ஒரு வார்த்தையைக் கொண்டு உனக்கு (ஒரு மகவை அளிக்க) நன்மாராயம் கூறுகிறான். அவரின் பெயர் மர்யமின் மைந்தன் ஈஸா மஸீஹ் என்பதாகும். அவர் இம்மை, மறுமையில் மிகக் கம்பீரமானவராகவும், (இறைவனுக்கு) மிக நெருங்கியவர்களில் ஒருவராகவும் இருப்பார். அன்றி, அவர் தொட்டிலில் (குழந்தையாக) இருக்கும்போதும்வாலிபபருவத்திலும் மனிதர்களுடன் பேசுவார். தவிர அவர் நல்லொழுக்கமுடையோர்களில் ஒருவராயும் இருப்பார் என்று மலக்குகள் கூறினர்' என்பதை திருக்குர்ஆன் 3:45, 46ல் பார்க்கலாம்.

'நல்லோரின்' கனவை கேலி செய்து கிண்டலாக எழுதும் எழுத்தாளர்கள் கீழ்க்காணும் நபிகளாரின் ஹதீதை ஆழ்ந்து கவனிப்பார்களாக.

اَلرُّؤْيَا الصَّالِحَةُ جُزْءٌ مِنْ سِتَّةٍ وَّاَرْبَعِيْنَ جُزْءً مِنَ النُّبُوَّةِ

சாலிஹான கனவு நுபவ்வத்துடைய நாற்பத்தாறு பங்கில் ஒரு பங்காகும்' என்ற ஹதீதை புகாரி, முஸ்லிம் போன்ற நூல்களில் காண்க.

مَنْ لَمْ يُؤْمِنْ بِالرُّؤْيَا الصَّالِحَةِ لَمْ يُؤْمِنْ بِاللّٰهِ وَلَا بِالْيَوْمِ الْاٰخِرِ

'சாலிஹான கனவை எவன் நம்பவில்லையோ அவன் அல்லாஹ்வைக் கொண்டும் மறுமையைக் கொண்டும் ஈமான் கொள்ள மாட்டான்' என்னும் இந்த ஹதீதின் விபரத்தை இமாம் அப்துல் கனி நாபில்ஸி பெய்ரூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களது தஃதீருல் மனாம் என்னும் நூலில் பார்க்கலாம்.

**சிசுவில் அற்புதம்**

மர்யம்அலைஹிஸ்ஸலாமவர்கள்ஈஸாஅலைஹிஸ்ஸலாம்அவர்களை பெற்றெடுத்து அவர்களை ஊரக்குள் கொண்டு வந்தபோது மக்கள் அவர்களை தூஷித்தனர். அப்போது அவர்கள் தமது குழந்தையிடம் கேட்குமாறு சைக்கினை செய்தனர்.

قَالَ اِنِّي عَبْدُ اللّٰهِ آتَانِيَ الْكِتَابَ وَجَعَلَنِي نَبِيًّا وَجَعَلَنِي مُبَارَكًا أَيْنَ مَا كُنتُ وَأَوْصَانِي بِالصَّلَاةِ وَالزَّكَاةِ مَا دُمْتُ حَيًّا

www.sufimanzil.org

அதற்கந்த ஜனங்கள் பிறந்த குழந்தையிடம் எவ்வாறு பேச முடியும்? எனக் கேட்க, ஈஸா நபியவர்கள் திடனாக நான் அல்லாஹ்வின் அடிமை. அவன் எனக்கொரு வேதத்தை தந்து என்னை ஒரு நபியாகவும் நியமித்திருக்கிறான் எனக் கூறிய வரலாற்றை திருக்குர்ஆன் 19:30,31ல் பார்க்கலாம்.

**கர்ப்பத்தில் அற்புதம்**

நபிமார்கள் இப்புவிக்கு வருகைதந்தபின் இறைப்பாதையில் வணக்க வழிபாடுகளைப் புரிந்து நேரிய நெறியில் நடந்து நபித்துவத்தைப் பெறவில்லை. மாறாக இறைவன் ஆன்மாக்களிடம் வாக்குறுதி பெற்ற 'ரோஜே மீசாக்'கிலேயே அவர்களை நபிமார்களாகத் தேர்ந்தெடுத்து இப்பூமிக்கு வந்தபின் நபித்துவத்தை வெளிப்படுத்துகிறான். இவ்வாறே குத்புகளையும் ரோஜே மீசாக்கிலேயே அவர்களை அல்லாஹ் குத்புகளாக தேர்ந்தெடுத்து இப்பூமிக்கு வந்தபின் அவர்களில் இருந்து விலாயத்தை வெளிப்படுத்துகிறான். இத்தகைய உன்னத நிலையுடையோர்கள் சிசுவில் மட்டுமல்ல! கர்ப்பத்திலும் ஏன்! அதற்கும் முந்திய ரத்தமாக, சதையாக இருக்கின்றபோதே பல்வேறு அற்புதங்களை நிகழ்த்திடும் வல்லமையுடையவர்கள்.

ஜக்கரிய்யாஅலைஹிஸ்ஸலாம் அவர்களின் மனைவி ஈஷாஃ அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒருமுறை மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை காணச் சென்று அவர்களுக்கெதிரே அமர்ந்திருந்தனர் அப்போது நிகழ்ந்ததை மர்யமிடம் ஈஷாஃ இவ்வாறு கூறுகின்றனர்:

'எனது கருவிலுள்ள குழந்தை உங்கள் கருவிலிருக்கும் குழந்தைக்கு ஸுஜுது செய்வதால் எனது திரேகத்தில் வலி ஏற்படுகிறது'. இதன் மூலம் உங்களின் வயிற்றில் ஒரு மிகப்பெரும் மகத்துவமிக்க ஒருவர் இருக்கின்றார் என்பதை நிச்சயமாக நான் அறிந்து கொள்கிறேன் எனக் கூற, இது கேட்ட மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'எனது கருவில் உள்ள குழந்தையும் அதற்கு பிரதியாக ஸுஜூது செய்வதை நானும் உணர்கிறேன்' எனக் கூறினர்.

இச்சம்பவத்தை ஞானிகள் நாயகம் ஞானக்கடல் அல்லாமா முஹம்மத் ஜலாலுத்தீன் ரூமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது மஸ்னவீ ஷரீப் பாகம் 2ல் விரிவாகக் கூறுகின்றனர்.

**நுத்பாவில் அற்புதம்**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மிஃராஜுக்கு சென்றபோது மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை சந்தித்தனர். அப்போது மூஸா நபியவர்கள் நபிகளாரிடம், தங்களின் உம்மத்திலுள்ள உலமாக்கள் பனீ இஸ்ராயீல்களில் உள்ள நபிமார்களைப் போன்றவர்களென்று தாங்கள் கூறியிருப்பதால், அவர்களில் ஒருவரோடு நான் பேச விரும்புகிறேன் எனக் கூறினர். அவ்வமயம் இமாம் கஜ்ஜாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆன்மா அங்கே ஆஜர்படுத்தப்பட்டது. இருவரும் ஒருவருக்கொருவர் ஸலாம் சொல்லிக் கொண்டபின், உமது பெயர் என்னவென்று மூஸா நபியவர்கள் கேட்க,முஹம்மதிப்னு முஹம்மதிப்னு முஹம்மத் கஜ்ஜாலி எனக் கூறினர். இதுகேட்ட மூஸா நபியவர்கள், நான் உமது பெயரைத்தானே கேட்டேன். உமது பாட்டனார், முப்பாட்டனார் பெயரையெல்லாம் கேட்கவில்லையே! எனக் கூறவும், மூஸாவே, உமது வலது கரத்தில் இருப்பதென்ன, என்றுதானே இறைவன் வினவினான். அது என் ஊன்று கோல் என்று சொன்னால் போதாதா? மாறாக இது என் ஊன்று கோல். இதை ஊன்றிக் கொள்வேன். ஆடுகளை மேய்ப்பேன். இன்னபிற தேவைகளையும் இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்வேன் என்றெல்லாம் கூறினீர்களே! என இமாம் கஜ்ஜாலி அவர்கள் திருப்பிக் கேட்க, மூஸா நபியவர்கள், இறைவன் எல்லாம் அறிந்தவனாயிருக்க கையில் இருப்பதென்ன எனக் கேட்டதற்குரிய காரணம், அவனோடு நான் பேசி கலந்துறவாடவே அவ்வாறு என்னிடம் கேட்கிறனர் என்பதை அறிந்து பேச்சை அதிகப்படுத்தினேன் எனக் கூறினர். இதுகேட்ட இமாம் கஜ்ஜாலி அவர்கள் தாங்கள் விரும்பியது போல நானும் தங்களுடன் பேசுவதைக் கொண்டு இன்பம் பெறுவதற்காகவே எனது பேச்சை வளர்த்தேனெனக் கூறினர்.

அப்போது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் கரத்திலிருந்த தடியால் இமாமைத் தட்டி, நபியிடம் நீர் மரியாதையைப் பேணவில்லையா? என்றனர். இதன்பின் இமாம் கஜ்ஜாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 450ல் இவ்வவுலகில் பிறந்தபோ, 'அங்கே தட்டப்பட்ட தடியின் அடையாளத் தடிப்பு அவர்களின் மேனியில் இருந்தது'.

இச்சம்பவம் ஹிர்ஜுல் ஆஷிக்கீன் என்னும் நூலில் எழுதப்பட்டிருப்பதாக தப்ரீஜுல் காத்திர் என்னும் நூல் கூறுகிறது. இச்சம்பவத்தை தப்ஸீர் ரூஹுல் பயான் பாகம் 5 பக்கம் 375லும் காணலாம்.

ஆதலால் வலிமார்களில் இரு பிரிவினர் உண்டு. ஒரு பிரிவார் உலகத்தில் ஷரீஅத்தைப் பேணி நன்னெறியில் நடந்து வணக்க வழிபாடுகளை நிகழ்த்தி இறைவனின் பாதையில் தன்னை அழித்து பனாவாகி விலாயத்தைப் பெற்றவர்கள்.

இதற்கு 'கஸபீ' என்று பெயர். மற்றோர் பிரிவினர் ரோஜே மீசாக்கில் விலாயத்தைக் கொடுக்கப்பட்டவர்கள். இதற்கு 'அத்தாயீ' என்று பெயர். கௌதுகள், குத்புகள் போன்றோர் அத்தாயீ பிரிவைச் சார்ந்தவர்களே என்னும் விபரம் வேலூர் பாக்கியாத் ஸாலிஹாத் அரபிக் கல்லூரியின் ஸ்தாபகர் அல்லாமா ஷைகு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ஞானகுரு அஷ்ஷெய்கு ஷாஹ் முஹ்யித்தீன் சாகிப் வேலூரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது 'ஜவாஹிருஸ் ஸுலூக்' பக்கம் 114ல்' குறிப்பிடுகின்றனர்.

**இறந்தபின் உயிர் பெறல்**

ஒருமுறை இறந்து அடக்கப்பட்டவர் மீண்டும் உயிர்த்தெழுந்து திரும்ப வரவில்லையென்றும், இறந்தவர் இறந்தவரே. அவர் மீண்டும் இப்புவிக்கு வருவது அறவே சாத்தியமில்லை என இறைவன் ,திருமறையில் குறிப்பிடுவதாக கூறுகின்றனர். இவர்களின் இக்கூற்றுக்கு மாறாக இறந்தோர் உயிர்த்தெழுந்த விசயம் பற்றி இறைவன் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் கூறுகின்றான்.

இஸ்ரவேலர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி... அல்லாஹ்வை எங்களின் கண்களால் காணாதவரை நாங்கள் விசுவாசம் கொள்ள மாட்டோமெனக் கூறியபோது, இறைவன் இடி முழக்கத்தைக் கொண்டு மரணிக்கச் செய்தான். பின்னர் நபியின் வேண்டுகோளுக்கொப்ப மீண்டும் அவர்களை உயிர்ப்பித்ததாக திருக்குர்ஆன் 2:55, 56ல் கூறுகிறான்.

பனீ இஸ்ரவேலர்களில் ஒருவன் ஒருவனைக் கொலை செய்துவிட்டு தப்பிக்க வழி தேடியபோது, இறைவன் ஒரு காளை மாட்டை அறுத்து அதனுடைய ஒரு பாகத்தை எடுத்து இறந்தவன் மீது அடிக்குமாறு கூறினான். அவ்வாறே செய்ய அவன் மீண்டும் உயிர்ப்பெற்று எழுந்து கொலையாளியைக் காண்பித்த சம்பவம் திருக்குர்ஆன் 2:67- 73ல் கூறப்பட்டுள்ளது.

புக்த்து நஸர் என்னும் கொடுங்கோல் மன்னன் ஜெருஸலத்தில் உள்ள பைத்துல் முகத்தஸ் மஸ்ஜிதை இடித்துத் தரைமட்டமாக்கி ஊரையும் அழித்து நாசப்படுத்தி விட்டுச் சென்றான். அப்போது அவ்வூர் வழியே சென்ற நபி உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்நகரம் மீண்டும் எவ்வாறு செழிப்படையப் போகிறது என வருத்தத்துடன் கூறினர். இதில் நபிமார்களையும், அவர்களின் சவாரியான கழுதையையும் நூறு ஆண்டுகள் வரை மரிக்கச் செய்து பின்னர் மீண்டும் அவர்களை உயிர்ப்பித்து எத்தனை காலம் தாமதித்திருந்தீர் எனக் கேட்க, ஒருநாள் அல்லது அதில் ஒரு பகுதி எனக் கூறினர். இல்லை நூறு ஆண்டுகள் மரித்திருந்தீர். உமது கழுதை இறந்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போய்விட்ட எலும்பாக இருப்பதைப் பாரும் என்று இறைவன் கூறி மீண்டும் எவ்வாறு உயிர்ப்பிக்கிறான் என்பதற்கு ஆதாரமாக கழுதைக்கும் உயிர் தந்து எழுந்திருக்கச் செய்த வரலாற்றை திருக்குர்ஆன் 2:259ல் கூறுகின்றான்.

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் இறைவா! இறந்தோரை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் எனக் கேட்க, நான்கு பறவைகளை துண்டுதுண்டாக வெட்டி அவற்றை நான்கு மலை உச்சியின் மீது வைத்து விட்டு, மீண்டும் அப்பறவையை அழைக்குமாறு சொன்னான். அவ்வாறே செய்ய அவை உயிர்ப்பெற்று வந்ததை திருக்குர்ஆன் 2:260ல் சொல்லிக் காட்டுகிறான். ஆதலால் இறைவனது அருள்பெற்ற நபிமார்கள், வலிமார்கள் இப்புவியை விட்டு ஒரு முறை மரணம் என்னும் போர்வையைக்குள் புகுந்து மண்ணறையில் மறைந்தாலும் அவர்களின் சேவை மீண்டும் இவ்வுலகுக்குத் தேவையென இறைவன் நினைத்தால் மறுபடியும் அவர்களை உயிர்ப்பித்து இப்புவிக்கு திரும்பவும் அனுப்புவது சர்வ சக்தனாகிய அல்லாஹ்வுக்கு ஒரு பெரிய விசயமல்ல என்பது குர்ஆனைக் கொண்டு ஊர்ஜிதமாகிறது.

இறைவனது மெய்யடியார்களான வலிமார்கள் சிருஷ்டிகளின் பார்வையிலிருந்து மறைந்திட விரும்பும்போது மரணம் என்னும் போர்வைக்குள் புகுந்து கொள்வர். அவர்களுக்கு மரணம் என்பது மனிதர்களின் வெளிப்பார்வையை விட்டும் மறைவதே அன்றிவேறல்ல .ஏனெனில் அவர்களும் மரணித்தனரென்று சொல்லப்படுவதற்காகவே.

ஒளியான நூர் என்னும் ஒரே அஸ்திவாரத்தில் அமைந்த உயிர் உடல் என்னும் இவ்விரு பொருளும் ஒன்றோடொன்று இணைந்து மறைவதும், வெளிப்படுவதும் ஆன்மசக்தி பெற்ற பெரியோர்களிடம் ஆச்சரியமான ஒரு காரியம் அல்ல. வலிமார்களிடம் ஸ்தூலத்திற்கும், சூட்சமத்திற்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசமும் கிடையாது. சூட்சமத்திற்குள் ஸ்தூலம் அடங்குவது அவர்களிடம் ஒரு பெரும் காரியம் அல்ல. அவர்கள் ஒருமுறை அல்ல. பலமுறை சமாதியான பின்னரும் கூட ஸ்தூலத்தை சூட்சமத்திற்குள் அடக்கி கப்ருகளை விட்டு வெளியே வருவது அவர்களுக்கு எளிதான காரியமே. இறைவன் அத்தகைய ஓர் ஆற்றலை அவர்களுக்கு வழங்கியுள்ளான்.

பின்னும் இறைநேசர்களுக்கு இறைவனால் அருளப்பட்டிருக்கும் கராமத்தின் பொருட்டால் ரூஹானி சக்தியைக் கொண்டு ஜீவியத்திலும் மரணத்திற்குப் பின்னரும் அவர்கள் வெளிப்பட்டு உலகில் நடமாடக்கூடிய சக்தி அவர்களுக்குண்டு' என அல் கப்ருத்தால் அலா உஜூதில் குத்பி வல் அவ்தாத்' என்னும் நூலில் அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களும்,'நபஹாத்துல் குர்பு வல்இத்திஸால்' என்னும் நூலில் இமாம் செய்யித் ஷஹாபுத்தீன் அஹ்மத் ஹுஸைனி ஹமவி ஹனபி' ரஹிமஹுல்லாஹ் அவர்களும் கூறுகின்றனர்.

ஆனால் நபிமார்களின் முஃஜிஸாத்துக்களையும் வலிமார்களின் கராமத்துக்களையும் மறுப்போர், இறைவன் மரணிக்கச் செய்து பின்னர் மீண்டும் உயிர் பெற்றெழச் செய்த திருமறை வசனங்களில் காணப்படும் மௌத், கத்தல்' என்னும் பதங்களுக்குரிய சரியான அர்த்தத்தை மாற்றி மயக்கம், தூக்கம், உணர்வின்மை என்றெல்லாம் கூறுகின்றனர். இவர்களின் இக்கூற்றை முஸ்லிம்கள் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.இவை சுன்னத்வல் ஜமாஅத்தினரால் ஏற்கப்பட்டதும் அல்ல.

குத்புர் ரப்பானி வல் ஆரிபுஸ் ஸமதானி இமாம் அப்துல் வஹ்ஹாப் ஷஹ்ரானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஜியாரத்துச் செய்வதற்காக செய்யிதினா உமரிப்னு பாரிழ் ரலியல்லாஹு அன்ஹு வின் கப்ரு ஷரீபிற்கு சென்றபோது அங்கே அவர்களைக் காணாது திரும்பி விட்டனர். பின்னர் உமரிப்னு பாரிழ் அவர்கள் ஷஃரானி அவர்களிடம் சென்று, அவசியத்தின் நிமித்தம் வெளியே சென்றிருந்ததாகக் கூறி, மன்னிப்புக் கேட்டதாய் தமது லத்தாயிபுல் மினன் என்னும் நூலில் இமாம் ஷஃரானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர். இன்னும் அந்நூலில்...

செய்யித் ஷெய்கு அப்பாஸ் முர்ஸீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை சனிக்கிழமை சூரிய உதயத்திற்கு முன்னும், செய்யித் இப்றாஹீமுல் அஃரஜ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை வெள்ளிக்கிழமை மஃரிபிற்குப் பின்னும் செய்யித் யாகூத்தல் அர்ஷ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை செவ்வாய்கிழமை லுஹருக்குப் பின்பும் அவரவர் கப்ருகளுக்குச் சென்று ஜியாரத்துச்

செய்யுமாறும், அவர்களனைவரும் குறிப்பிட்ட அந்நேரங்களில்தான் அங்கே ஆஜராகி இருப்பரென்றும் இதனை அகப்பார்வையுடையேரைத் தவிர மற்றோர் அறிய மாட்டார்களாகையால், கப்ருகளில் அவர்களிருக்கின்றனர் என்ற எண்ணத்துடன் கஷ்பு இல்லாதோர் ஜியாரத்துச் செய்ய வேண்டுமென்றும், சையித் அலீ பதவீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இன்னும் அந்நூலில், வலிமார்களில் அநேகர் தமது மரணத்திற்குப் பின்னரும் கப்ருகளை விட்டு வெளியே வரவும் செய்வார்கள். திரும்பவும் கப்ருக்குள் சென்றும் விடுவார்கள். இதில் அவர்களுக்கு எவ்விதத் தடையுமில்லை' என்றும் கூறுகின்றனர்.

மேற்கண்ட 'லத்தாயிபுல் மினன்' பக்கம் 144, 145ல் இவையனைத்தையும் காணலாம்.

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைந்த தமது சஹாபாக்களின் ஆண்மாக்களோடு உலகமனைத்தையும் சுற்றி வருவதை வலிமார்கள் கண்கூடாக கண்டிருக்கின்றனர் என இமாம் கஜ்ஜாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஆதாரத்துடன் கூறுவதை தப்ஸீர் ரூஹுல் பயான் பாகம் 10, பக்கம் 99ல் காண்க. எனவே இறைநேசர்கள் தமது மறைவுக்குப் பின்னரும் பலமுறை வெளிவந்து பலர் காணும் வண்ணம் நடமாடி, பல இடங்களில் சமாதியாகும் விஷயத்தில் கிஞ்சிற்றும் சந்தேகம் வேண்டாம்.

மேற்கண்ட குர்ஆன், ஹதீது, இஜ்மாஃ, ரிவாயத் மற்றும் பெரியோர்களின் விளக்கத்தைக் கொண்டு நபிமார்கள், வலிமார்கள் பால் உதவி, இரட்சிப்புத் தேடலாம் என்பது குன்றின் மேலிட்ட தீபம் போல் தெரிய வருகிறது. அன்னோர் மரணத்திற்குப் பின்னர் செய்யும் உதவியே, இரட்சிப்பே மிக உன்னதமானது. அவர்கள் வெளிரங்கத்தில் செய்யும் உதவி எதார்த்தத்தில் இறைவன் செய்தவையே. தென்னிந்தியாவில் மார்க்கத்தின் ஞானச்சுடரளித்த ஷரஹுப் புலி மாதிஹுர் ரஸூல் குர்புர் ரப்பானி அல்லாமா ஷெய்கு சதக்கத்துல்லாஹில் காஹிரீ சித்தீகி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஈருலக இரடசகர் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பால் வித்ரிய்யாவில் மீம்- காபிய்யாவில் வஸீலா தேடியிருக்கும் 'தஷஃப்பஃ' என்னும் 19வது பைத்திற்கு, நபஹாத்துல்-இத்ரிய்யா ஃபீ ஷரஹில் வித்ரிய்யாவில் நூஹ்பின் அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கீழ்க்கண்டவாறு விரிவுரை செய்துள்ளனர்.

யாரஸூலல்லாஹ்! தாங்கள் எனக்காக மன்றாடுங்கள். என்னை குற்றம் காணாதீர்கள். எனது பாவத்தை அழித்து விடுங்கள். தங்களை ஆதரவு வைப்பவனாகஎனக்கு அருளுங்கள். என்னை சகல தீங்குகளை விட்டும் ஈடேற்றமாக்கி வையுங்கள். எனக்கு விடுதலை தாருங்கள். எனது நோயை போக்குங்கள். என்னைக் கவலைக்குள்ளாக்கும் துன்பம் துயரங்களை விட்டும்

என்னை நீக்குங்கள். என்மீது இரங்குங்கள். என்மேல் கிருபையாக இருங்கள். எனது குற்றத்தை மன்னியுங்கள். என்மீது தயவாக இருங்கள். என்னை நரகத்தை விட்டும் காப்பாற்றுங்கள். சிருஷ்டிகளைப் படைத்த இறைவன் தாங்கள் கேட்பதையெல்லாம் ஏற்றுக் கொள்பவன். எனவே அவனிடம் எனக்காக முறையிடுங்கள். குற்றவாளிகளுக்கென நரகை வெளிப்படுத்தும் நேரத்தில் என்னை அவன் நரகை விட்டும் காப்பாற்றுவான்.

என்று இரட்சிப்புத் தேடியிருப்பதால் வஸீலா தேடக்கூடாதெனக் கூறுவோர் தமிழக மாணிக்கம் அப்பா அவர்களை விட எவ்வகையில் பெரியவரென்பது நமக்குத் தெரியவில்லை.

இன்னும் அண்ணல் நபிகளார், அவர்தம் தோழர்கள், தாபியீனகள், முஜ்தஹிதீன்களான இமாம்கள், அக்தாபுகள், வலிமார்கள், சாலிஹீன்கள் போன்றோரெல்லாம் வஸீலா தேடி பிரயோஜனமடைந்துள்ளனர். அவர்கள் நேரில் கண்டு அனுபவித்த வரலாறுகள் கணக்கற்றவை. அத்தகையோரில் பிக்ஹுடைய இமாம்கள், குத்புகள் போன்றோர் சிலர் கீழ்காணும் வண்ணம் கூறுவதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

1.ஹழ்ரத் மூஸல் காழிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ருஷரீப் விஷத்தை முறிக்கும் சஞ்சீவியாகும். -இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ்

2.திடனாக இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கப்ரு ஜனங்களின் வேண்டுதல்களை நிறைவேற்றக் கூடிய இடமாகும் - இப்னு ஹஜர் மக்கீ ரஹிமஹுல்லாஹ்

3. ஷைகு மஃரூபுல் கர்கீ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கப்ரு திடனாகப் பரீட்சிக்கப்பட்ட ஔஷதமாகும் - இமாம் குஷைரி ரஹிமஹுல்லாஹ்

4. இறைவனிடம் தேவையிருந்து அதைப் பெற்றுக் கொள்ள விழைபவர் இமாம் கஜ்ஜாலி ரஹிமஹுல்லாஹ்வைக் கொண்டு இறைவனிடம் வஸீலா தேடவும். -இமாம் ஷாதுலி ரஹிமஹுல்லாஹ்

5. தேவையுள்ளோர் எனது கப்ருக்கு வந்து தேவையை நிறைவேற்றித் தருமாறு கேட்பாராயின் நான் அதை நிறைவேற்றித் தருவேன். ஏனெனில் எனக்கும், அவருக்குமிடையேயுள்ள தூரம் ஒருமுழம் மண்தான். தன்னைச் சேர்ந்தவர்களை ஒரு முழம் மண் தடுக்குமானால் அவர் ஆண் பிள்ளையல்ல. -குத்பு ஷம்ஸுத்தீன் ஹனபி ரஹிமஹுல்லாஹ்

6. நான் கப்ரை விட்டு வெளிவந்து உலவும் 'தஸர்ருஃபாத்' என்னும் சக்தியுடையவன். எவருக்காவது தேவையிருந்தால் அவர் என் முன்னால் வந்து என்னிடம் கேட்பாராயின் நான் அதனை நிறைவேற்றித் தருவேன் - ஷைகு முஹம்மதிப்னு அஹ்மத் பர்கல் ரஹிமஹுல்லாஹ்

7.இம்மகான்அபீதீஜ்என்னுமிடத்தில்அடங்கியுள்ளனர். இவர்கள் அடக்கமாகியுள்ள இடத்தில் மீனை சமைத்தபோது, அது வேகவே இல்லை. நெருப்பு தனது ஆற்றலை இழந்து விட்டது. இவர்கள் கூறுகின்றனர்: எனது கப்ருக்கு வந்து ஜியாரத் செய்வோரின் திரேகத்தை நரகம் கரிக்காது. இவ்வாறு நான் இறைவனிடம் வாக்குப் பெற்றிருக்கிறேன். - குத்பு ஷைகு அபூபக்கரிப்னு ஹவாருல் பதாயிகீ ரஹிமஹுல்லாஹ்

8. உமக்கு ஏதேனும் தேவையிருந்து அது நிறைவேற நீர் விரும்பினால் ஸையிதா நபீஸா தாஹிரா மிஸ்ரிய்யா ரலியல்லாஹு அன்ஹாவிற்கு ஒரு 'பல்ஸ்' (செப்புக் காசு) நேர்ந்து கொள்ளும். உமது நாட்டம் நிறைவேறும் என அண்ணல் நபிகளார் எனக்குத் தோன்றி கூறியுள்ளனர். -ஷைகு முஹம்மத் அபுல் மவாஹிப் ரஹிமஹுல்லாஹ்

**எச்சரிக்கை**

வாசகர்களே!நபிமார்,வலிமார்போன்றோர்இறப்புக்குப்பின்னரும் ஜீவியத்தையுடையவர்கள். அவர்கள் அழியா திரேகத்தையுடையவர்கள். தமது இறப்புக்குப் பின்பும் கப்ருகளைவிட்டு வெளியேறி நடமாடும் சக்தியையுடையவர்கள் அவர்கள் என்றென்றும் அற்புதங்களை நிகழ்த்த வல்லமையுடையவர்கள். அவர்கள் பால் வஸீலா தேடுதல் கூடுமென்பதை ஓரளவுக்கு நிரூபித்துக் காட்டியிருப்பதே அறிவுடையோருக்கு போதுமானது. இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ள விரும்;புவோர் ஹிதாயத்துல் அனாம் இலா ஜியாரத்தில் அவ்லியாயில் கிராம் என்னும் தமிழ் நூலை பார்வையிடுக.

நபிமார்களைப்பற்றிபிரஸ்தாபம்செய்வதுவணக்கமாகும்.இன்னும் சாலிஹீன்களான வலிமார்களைப் பற்றி பிரஸ்தாபம் செய்வது பாவ நிவாரணமாகும் என தைலமீ ரஹிமஹுல்லாஹ்வைக் கொண்டு முஸ்னதுல் பிர்தௌஸ் என்னும் நூல் கூறுகிறது.

எனவே நாகூர்ஷரீபில் அமர்ந்து திலகமாக இலங்கும் குத்புல் மஜீத் பர்துல் வஹீத் ஸையித் அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது ரலியல்லாஹு அன்ஹு பாதுஷா நாயகமவர்களைப் போன்ற

குத்புமார்களைப் பிரபல்யப்படுத்துவது மிக மிகப் பொருத்தமே. இத்தகைய வலியை அறிவது அல்லாஹ்வை அறிவதை விட மிகக் கடினமானது. நூல்: தப்ஸீர் ரூஹுல் பயான், பாகம் 9, 10 பக்கம் 531, 539.

இத்தகைய மகான்களை உலகை உய்விக்கும் மஹாத்மாக்களை உலகம் போற்றும் உத்தமர்களை சிறிதும் யோசிக்காது நிந்திக்கும் வஞ்சகர்களின் கூட்டத்தை விட்டு எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவரையும் காத்தருள் புரிவானாக. அவர்களுக்கும் நேர்வழியைக் காட்டுவானாக. ஆமீன்.

எவன் எனது வலியுடன் பகைமை கொள்கிறானோ அவன் என்னோடு போர் தொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று புகாரியில் வரும் அண்ணல் நபிகளாரது தூய்மையான வாக்கையும், மார்க்கத்தையுடைய அறிவாளர் ஒவ்வொருவரும் அறியக் கூடிய விஷயம் யாதெனில், வலிமார்களை மறுப்பதன் மூலம் அழிவின் பள்ளத்தில் விழ வேண்டாம். ஏனெனில், மறுப்பதென்பது விஷத்தை அருந்துவதாகும். அது உங்களைக் கொன்று விடும். இதை எங்கள் காலத்திலும், எங்களின் முன்னோர்களது காலத்திலும் நாங்கள் பார்த்திருக்கிறோம் என இப்னு ஹஜர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பத்தாவா என்னும் நூலில் கூறியிருப்பதையும் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்வோமாக!

*முற்றும்.*